# ஆரையூர் இளவல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது குடும்பத்தின்

ஒளிச்சுடராய்

கலங்கரை விளக்காய் திகழ்ந்து

இனிதாய் இன்பமாய் சிறந்து

கண்ணும் கருத்துமாய் எமைக்

காத்து வழிநடத்தி

வாழ்வாங்கு வாழ்ந்து வானுறைந்த

என் அன்புத் தெய்வத்தின்

பாத கமலங்களில் இந்நினைவுமலரை

பவ்வியமாய் சமர்ப்பிக்கின்றோம்.

– குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31 - ம் நாள்

# நினைவஞ்சலி



அமரர்

# திரு.கந்தப்பன் செல்லத்தம்பி

மண்ணில்
27-03-1935

விண்ணில்
01-11-2019

"ஒளிரும் விகாரி ஓதரிய ஐப்பசியில்
வளரும் பிறைப்பக்கப் பஞ்சமியில் - களம் அமைத்து
கலைபடைத்த செல்லத் தம்பியெனும் மேலோன்
நிலைபெறவென்று ஏகினான் விண் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

அல்லல் போம் வல்வினை போம் அன்னை வயிற்றில் பிறந்த
தொல்லைபோம் போகாத்துயரம் போம் – நல்ல
குணமதிக மாகுமருளை கோபுரத்துள் வீற்றிருக்கும்
கணபதியை கை தொழுதாற் காப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரும் நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந்தாரே

## திருவாசகம்

உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதனால் அடியேனுள்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்
புரியாய் பொன்னம் பலத்தெம்
முடியா முதலே யென் கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதனுள்
ஆலிக்கு மந்தனர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

உலகெலா முணர்ந்தோதற் கரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

## திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புரை வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசல மமர்ந்த பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆரையூர் இளவல் - சுருக்கச் சரிதை

இலங்கையின் கிழக்கு மாகாணம் இயற்கை வளங்கள் நிறைந்து விளங்கும் புண்ணிய பூமியாகும். இப்பேர்ப்பட்ட கிழக்கில் நடுவண் நகராக விளங்கும் மட்டுநகருக்குத் தென்பால் 6கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஆரையம்பதி எனும் பேரூரின் 1ம் குறிச்சியில் கணபதிப்பிள்ளை கந்தப்பன் - வெள்ளையர் குஞ்சுப்பிள்ளை தம்பதிக்கு மகனாக 1935ம் ஆண்டு மார்ச் 27ம் திகதி பிறந்தார் செல்லத்தம்பி. தமக்கை, தமையனுக்குப் பின் மூன்றாவதாகப் பிறந்த இவர் ஒரு தங்கை, தம்பிக்கு அண்ணனுமாவார். இளம் வயதிலேயே தந்தையாரை இழந்த ஐவரும் தாயின் அரவணைப்பில் வளர்ந்தனர்.

சாந்தம் - அதேபோல் சுறுசுறுப்பு பணிவு - அதே நேரம் தீவிரம். இப்படிப்பட்ட குணாதிசயங்களோடு சிறு பராயத்திலிருந்தே வலம் வந்த செல்லத்தம்பி, தனது ஆரம்பக் கல்வியை ஆரையம்பதி இ.கி.மி. தமிழ்க் கலவன் பாடசாலையிலும் பின்னர் எஸ்.எஸ்.சி. வரையான கல்வியை மட்/ கோட்டைமுனை றோ.க. வித்தியாலயத்திலும் பெற்றார்.

தமிழ் ஆர்வமிகுதியால் இலக்கியம், இதிகாசம் என்பவற்றில் ஈடுபாடு இவருக்கு இயல்பாகவே ஏற்பட்டது. பாடசாலை நாட்களில் இவர் நாவன்மை மிக்கவராகவும் சொல்லாட்சி கொண்டவராகவும் விளங்கினார்.

மட்/அரசடி மகா வித்தியாலயத்தில் (தற்போது மகாஜன கல்லூரி) இராம இராச்சியம் எனும் நாடகத்தை இவர் எழுதி நெறிப்படுத்தி மேடையேற்றினார். இது நிகழும் போது (1948) இவருக்கு வயது 13. இது இவரது முதலாவது நாடக ஆக்கமாகும். அப்போதிருந்தே நாடகங்கள், நாட்டுக்கூத்து, ஏனைய கிராமியக் கலைகளில் இவர் ஆர்வம் கொண்டு கலைத்துறையில் பயணிக்கத் தொடங்கினார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தான் பிறந்த ஊர்ப்பெயரை முன்னிறுத்தி "ஆரையூர் இளவல்" என்ற புனைபெயரில் தனது ஆக்கங்களை உருவாக்கினார்.

தன் தமையனார் மின்சார சபையில் சாரதியாகப் பணியாற்ற, இவர் ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையில் **(RVDB)** இலிகிதராகப் பதவியேற்று அம்பாறையில் 11 வருடங்கள் (1952 - 63) பணியாற்றினார். பின்னர் கிராமசேவகர் உத்தியோகம் கிடைக்க, மட்டக்களப்புக்கு வந்து மஞ்சந்தொடுவாயில் பணியாற்றத் தொடங்கினார் இக்காலகட்டத்தில் இவருக்கு சுவீப் அதிர்ஷ்டம் (2வது பரிசு) அடித்தது. அதைக் கொண்டு பெரியகளம் தீவில் வயற்காணி வாங்கி வேளாண்மையிலும் ஈடுபட்டார்.

கிராம சேவகர் உத்தியோகத்தில் பூரண ஆளுமை உள்ளவராகத் திகழந்த செல்லத்தம்பி அவர்கள், தனது சேவைக்காலத்தில் பல சவால்களுக்கும் முகங்கொடுத்து தனது சாதுரியத்தால் அவற்றை வென்று தொழில் ரீதியான சாகசங்களும் புரிந்தார். திருடனைப் பிடித்தது, கொலைக்குற்றம் சாட்டப்பட்டு தலைமறைவாயிருந்த ஒருவரை மடக்கிப் பிடித்தது போன்ற "தீரச்" செயல்களை அவர் தனது வார்த்தைகளில் விபரிக்கும்போது சுவாரஸ்யமாயிருக்கும்.

அந்நாட்களில் கிராம சேவகர் என்போர் (விதானையார்) சமூகத்தில் உயர் தொண்டராகவே பார்க்கப்படுவர். திரு. செல்லத்தம்பி அவர்களும் இத்தொண்டில் உயர் மட்டத்தில் இருந்து சமூகப் பணியாற்றி வந்தார். இவ்விதம் மஞ்சந்தொடுவாயில் பணியாற்றிவருகையில் கலை ஆர்வலர்கள் இவரை அணுகி பல ஆலோசனைகள் பெற்றுச்செல்வர். கடமையிலும் சரி, இதர பணிகளிலும் சரி, அனைவரதும் நல்லபிப்பிராயத்தைப் பெற்றுக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தமக்கை, தமையன், தங்கை ஆகியோர் தமக்கான வாழ்க்கைத் துணைகளுடன் இல்லறத்தில் ஈடுபட்டு மக்கட் செல்வங்களைப் பெற்று மகிழ, அடுத்து இவர் ஆரையம்பதி வைரமுத்து இராசையா - பொன்னர் தங்கப்பிள்ளை தம்பதியின் சிரேஷ்ட புத்திரியான தவமணிதேவியை 1968ம் ஆண்டு ஆகஸ்ட் 26ம் திகதி கரம்பிடித்து இல்லறவாழ்வில் புகுந்தார். இல்லறத்தை நல்லறமாக்கி பிள்ளைச் செல்வங்களாக நான்கு ஆண் மக்களையும் ஐந்து பெண் மக்களையும் பெற்றனர். குறையேதும் வைக்காமல், தமது பிள்ளைகளுக்கு வேண்டியவற்றை அளித்து பாசமிக்க தந்தையாகத் திகழ்ந்தார் திரு. செல்லத்தம்பி. மஞ்சந்தொடுவாயிலிருந்து சொந்த ஊரான ஆரையம்பதிக்கு இடமாற்றம் பெற்றுவந்த இவர், ஓய்வு பெறும் வரை அங்கேயே கடமையாற்றினார்.

இவரது கலை, இலக்கிய முயற்சிகள் பரவலான அன்பர் குழாத்தை அளித்ததோடு, பொதுவான பிரபல்யத்தையும் பெற்றுத்தந்தன என்றால் அது மிகையாகாது.

செல்லத்தம்பி ஐயாவுக்கு வாய்த்த மனைவி சகல விதத்திலும் துணைநிற்க, மெச்சத்தக்க தம்பதியாய் இருவரும் வாழ்ந்தனர். திருமணமாகி 50 வருட பூர்த்தியை (2018) விமரிசையாக கொண்டாடினர் மக்களும் மருமக்களும் பேரர்களும்.

இவரது ஆஜானுபாகுவான தோற்றம், புன்முறுவல், வெள்ளை வேட்டி - சட்டை - பார்த்தவுடன் ஓர நல்ல பிரதிமையை ஏற்படுத்துவனவாம். சதாகாலமும் இவர்களது "தவபதி" இல்லத்தில் நண்பர்கள், உறவினர்கள் வருகை இருக்கும். அவர்களுக்கு அன்பான வரவேற்பும் உபசரிப்பும் எப்போதும் இருந்தமை கண்கூடு, இதிலெல்லாம் உண்மையாய் அகமகிழ்ச்சி கொண்டனர் இத்தம்பதியினர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திரு. செல்லத்தம்பி அவர்களைப் பற்றி தனியாக ஒரு புத்தகம் எழுதினால்தான் நிறைவு ஏற்படும். மேம்போக்காக ஒருசில விஷயங்களை இப்போது பார்க்க முடியும்.

இவரது நாடகங்களின் எண்ணிக்கை 80ஐ தாண்டும். அவை புராண, இதிகாச, இலக்கிய, வரலாற்று, சமூக விடயங்களைத் தொட்டு நிற்கும். அனைத்து நாடகங்களுமே பல தடவைகள் மேடையேற்றம் செய்யப்பட்டவை. ஆலயங்கள் போன்றவற்றுக்காக பல மேடையேற்றங்கள் நிதியுதவிக் காட்சிகளாக அமைந்தன. ஒரு நாளில் ஒரே நாடகம் இரண்டு,மூன்று "ஷோ" இடம்பெற்றதும் உண்டு.

இதற்கெல்லாம் ஆரையூர் இளவலின் அர்ப்பணிப்பு, ஈடுபாடு மட்டுமின்றி, சக கலைஞர்கள், அன்பர்கள் என்போரின் பூரண ஒத்துழைப்பை இவர் சம்பாதித்திருந்ததும் காரணமாகும்.

"வீடியோ" அறிமுகமான புதிதில் 'மண் சுமந்த மகேசன்" எனும் 'படத்தை" எழுதி நெறியாள்கை செய்யும் சந்தர்ப்பம் வந்தது. கிழக்கின் முன்னோடி வீடியோ படம் என இது பேசப்படுகிறது.

மேடை நாடகங்கள் பத்துக்கு மேற்பட்டவற்றில் இவர் முக்கிய பாத்திரமேற்று நடித்துள்ளார். இவர் எழுதிய நாட்டுக்கூத்துக்கள் வானொலியிலும் ஒலிபரப்பாகிப் பாராட்டுக்களைப் பெற்றன. இவரது சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், நாவல்கள் (2), இலங்கைத் தமிழ்த் தினசரிகள் பலவற்றிலும் பிரசுரமாகியுள்ளன. இவ்விதம் கலை, இலக்கியம் சார்ந்த அனைத்து துறைகளிலும் தடம் பதித்த இவர், ஆற்றியுள்ள சமய, இலக்கியச் சொற்பொழிவுகள் மூவாயிரத்தைத் தாண்டும்.

இவர் எழுதி வெளியிட்ட "விபுலானந்தர் வாழ்கிறார்" எனும் நூல் சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டையொட்டி அமைந்து, இராமகிருஷ்ண மடத்தின் பாராட்டைப் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது "நீறு பூத்த நெருப்பு" எனும் நாடகம் அந்நாட்களில் பிரமாண்டமான காட்சியமைப்புகளுடன் சக்கைப்போடு போட்ட நாடகமாகும். இவரது நாடகங்களின் தொகுப்பு நூலுக்கும் "நீறு பூத்த நெருப்பு" என்றே பொருத்தமான தலைப்பிட்டார்.

ஆரையூர் இளவலின் சமூக, கலைப்பணிகளைக் கௌரவித்து அரச நிறுவனங்கள், சுயாதீன அமைப்புகள் பல பட்டங்களையும் விருதுகளையும் வழங்கியுள்ளமை இங்கு குறிப்பிடற்பாலது. 90 களில் ஏற்பட்ட "இன முறுகல்" நிலையின்போது அமைக்கப்பட்ட சமாதானக் குழுவில் தீவிர செயற்பாட்டாளராக இயங்கி, பல திறத்தவரதும் நன்மதிப்பைப் பெற்றுக்கொண்ட செல்லத்தம்பி ஐயா, தன்னுடைய கலை, சமூக ஈடுபாட்டுக்கு உந்துசக்தியாக இருந்தவர்களாக முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரையும் பண்டிதர் உயர்திரு . செ. பூபாலபிள்ளை அவர்களையும், அவரது தங்கையின் கணவரும் மூத்த எழுத்தாளருமான அன்புமணி அவர்களையும் குறிப்பிட்டுக் கூறுவார்.

தன் தாயை தெய்வமாகப் போற்றிய இவர், அத்தாயின் கடைசிக்காலத்தில் தன் வீட்டிலேயே வைத்துப் பராமரித்து திருப்தியுற்றார். அவரது இல்லத்தலைவியும் இதற்கு உறுதுணையாக இருந்து கொண்டார்.

ஆரையூர் இளவலின் ஆற்றல், அனுபவம், ஆளுமை என்பவற்றின் அடிப்படையில் பல்கலைக்கழக மாணவர்கள் இவரை நேர்கண்டு தமது ஆய்வுச் சமர்ப்பணங்களில் அவற்றை உள்ளடக்கி பயனடைந்துள்ளனர்.

மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தினர் அண்மையில் இவருக்கு கௌரவமளித்துப் பாராட்ட ஏற்பாடு செய்திருந்தனர். சுகயீன அசௌகரியம் காரணமாக தன்னால் வரமுடியாமலிருந்ததை அவர்களுக்கு அறிவிக்க, குறிப்பிட்ட தினம் ஐயாவின் இல்லத்துக்கே வந்து கௌரவித்துச் சென்றனர். அந்த அன்பு உள்ளத்தினர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







வீட்டுக்கு வந்த விருது (ஒக்டோபர் 2019)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலாத நிலையிலும் அவர் பத்து நிமிடங்களுக்கு மேல் அத்தருணம் உரை நிகழ்த்தினார்.

இதை எழுதும் நான் அவருக்கு மைத்துனன் முறை. நானறிந்த வரையில் அவர் இதற்கு முன் ஒரு நாள் கூட மருத்துவமனையில் சிகிச்சைக்கெனத் தங்கியது கிடையாது. நோயுற்றுக் கிடந்ததுமில்லை. வாழ்வின் இறுதி அத்தியாயத்தின் போது எவருக்கும் பெரிதாக சிரமமெதுவும் வைக்கவுமில்லை. அக்டோபர் நடுப்பகுதியில் ஆரம்பித்து எல்லாமே ஒரு பத்துப் பதினைந்து நாட்களில் நடந்து முடிந்தன.

உணவு ஏற்க உடம்பு மறுத்தது.

உடம்பெல்லாம் நோவு உறுத்திற்று.

ஈரலில் பிரச்சினை என்றார்கள்.

மூச்சு நிற்பதற்கு மூன்று நாள் முன்பு அவர் வாயிலிருந்து ஸ்பஷ்டமாக உதிர்ந்த வார்த்தைகள் இவை:

**"கதை முடிஞ்சிது"**

உச்சபட்ச மருத்துவக் கவனிப்பையும் தாண்டி நவம்பர் 1ம் திகதி பிற்பகல் 3 மணிவாக்கில் ஆரையூர் தந்த பெருமகன் அமைதியாய் விடைபெற்றார்.

எங்கள் அத்தானின் ஆத்மா
சாந்தி பெற பிரார்த்திக்கிறேன்.

**இரா. ரவிஆனந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது கணவர்...

எங்களது திருமணம் 1968ம் ஆண்டு ஆவணி மாதம் 26ம் திகதி நடந்தது. இந்தத் திருமணம் மாற்றுத் திருமணமாக இருந்தது. அதாவது எனது அண்ணன் (அன்புமணி) எனது கணவரின் தங்கை பார்பதியையும், நான் எனது கணவரையும் முடிப்பதுதான் இந்த ஏற்பாடு.

அதன்படி கல்யாணமும் நடந்தது. எங்கள் வாழ்விலும் எல்லோரையும் போல் சிறு சிறு பூசல்கள் வந்தாலும் அது அப்பப்போ தோன்றி அப்பவே மறைந்து விடும். இதற்குக் காரணம் விட்டுக் கொடுத்துப் போகும் மனப்பான்மைதான். எங்களுக்கு ஒன்பது பிள்ளைகள் - ஐந்து பெண்கள், நான்கு ஆண்கள்.

எங்கள் பிள்ளைகளினால் எந்தப் பிரச்சினையுமில்லை. அவர்கள் எங்கள் சொற்படியே நடந்தார்கள். இதற்குக் காரணம் எந்தவித காரணம் கொண்டும் அடிக்கவோ, ஏசவோமாட்டார். அன்பாகச் சொல்லித்தான் திருத்துவார். நான் எதுவும் சத்தம் போட்டாலும் "விடுங்க போகப் போக சரியாகுவாங்க" என்று சொல்வார். இதன் காரணமாகவோ என்னவோ, பிள்ளைகள் எல்லாரும் நல்லவர்களாகவும், பண்பாடு உள்ளவர்களாகவும் சமூகத்தில் தலை நிமிர்ந்து நடக்கின்றார்கள். இதைவிட எங்களுக்கு வேறு என்ன வேண்டும்.!

இவர் ஒரு கிராம உத்தியோகத்தராக இருந்ததால் இவர் சமூக சேவை செய்வதற்கும், கலைப்பணிகள் புரிவதற்கும் அதிக வாய்ப்புக்கள் கிடைத்தது. அத்தோடு கூத்துக்கலையிலுப் நாடகத்துறையிலும் அதிக ஈடுபாடு காட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது குடும்பமும் கலைகளில் ஈடுபாடுள்ள குடும்பம் என்றபடியால் நானும் இவருடைய கலைப் பணிகளுக்கு ஓரளவு ஒத்தாசையாகத்தான் இருந்துள்ளேன் என்று நினைக்கிறேன். அந்த நாட்களில் ஏதும் நாடகங்கள் மேடையேற்றுவதாக இருந்தால் கலைஞர்களை வீட்டிற்கே வரச் சொல்லி ஒத்திகைகளை நடத்துவார். சில நாட்களில் இந்த ஒத்திகை பார்க்கும் படலம் இரவு 10 மணி 11 மணி வரை நீடிக்கும். அந்த வேளைகளில் எல்லாம் எனக்கு இப்போவும் ஞாபகமிருக்கிறது "தம்பி சுணங்கினால் மனிசி சோற்றுக்குள் தண்ணி ஊற்றிப் போடுவா, இனி நான் வீட்டுக்குப் போக வேண்டும்" என்று சொல்லுவார் மூனாக்கானா ஐயா.

இவர்களது ஒத்திகை பார்க்கும் படலம் தொடங்கி சிறிது நேரத்தில் இடை இடையே டீ, பிளெய்ன் டீ என்று என்னுடைய சேவை தொடங்கும். அந்த நாட்கள் மூனாக்கானா ஐயா காலம் சென்றவர்களான சந்திரசேகம்பிள்ளை மாஸ்ரர், தங்கம்மா அக்கா, அமரசிங்கம் மாஸ்டர், இன்னும் பல கலைஞர்கள் ஒன்றுகூடுவார்கள். அதில் தங்கம்மா அக்கா அவர்களின் கரகம், வசந்தன் கூத்து, கும்மி போன்ற கிராமிய நடனங்களில் நானும் கூட பாடி என்னுடைய ஒத்துழைப்பையும் நல்கியிருக்கின்றேன். இப்படி என்னுடைய கணவனின் கலைப்பணிக்கு நானும் அனுசரணையாக இருந்தேன் என்பதை நினைக்கும் போது ஓரளவு ஆறுதலாக இருக்கிறது.

அவர் அடிக்கடி சொல்லி சந்தோசப்படும் விடயம். "எனது தம்பியின் மகன் டொக்டர், எனது மைத்துனி சோதிமணியின் மகன் டொக்டர், எனது மைத்துனர் பூபாலரெத்தினத்தின் மகன் டொக்டர் எனது கடைசி மகளும் இப்போது டொக்டர்" என்பதுதான். ஆனால் நானும் பிள்ளைகளும் சந்தோஷப்படும் விடயம் என்னவென்றால், வந்தாறுமூலைப் பல்கலைக்கழக மாணவர்கள் அவர்களுடைய பல்கலைக்கழக ஆய்வுக் கட்டுரைக்காக பல தடவைகளில் வந்து எனது கணவரின் வாழ்க்கை வரலாறை அவரிடமே கேட்டு எழுதிக்கொண்டுபோவார்கள்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவரும் தன்னுடைய ஒவ்வொரு கட்ட உயர்வுகளையும் தக்க சான்றுகளுடன் விளக்கிச் சொல்வார். அந்த மாணவர்கள் இவரைச் சந்தித்த மகிழ்ச்சியுடன் சந்தோஷமாகச் செல்வார்கள். இவர்கள் மட்டுமல்ல இதே போன்று லண்டன், அமெரிக்கா போன்ற வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்களும் இவரிடம் வந்து தங்கள் ஆய்வுக் கட்டுரைகளை நிறைவு செய்து கொண்டு போவார்கள்.

இறைபக்தி கூடிய எனது கணவர் "கிராம சேவை உத்தியோகத்தர்" என்ற பெயருடன் வாழ்க்கையைத் தொடங்கி இவ்வளவு பெயரும், புகழும் பெற்று தான் படுக்கையில் வீழ்வதற்கு முதல் நாளும் சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு நடந்த விழாவில் உடல் நிலை காரணமாக அவரால் செல்ல முடியாததால், ஏற்பாட்டாளர்கள் வீட்டிற்கு வந்து அவரைக் கௌரவித்துப் பொன்னாடை போர்த்தி விருதும் வழங்கினர்கள். அத்தருணத்தில் என் கணவர் முடியாமல் இருந்த பொழுதும் மிகவும் அழகாகவும், தெளிவாகவும், அமைதியாகவும் 15 நிமிடநேரம் வரை நிதானமாக சொற்பொழிவாற்றினார்.

இதைக் கண்டு வந்த எல்லோருக்கும் நல்ல திருப்தியும், மகிழ்ச்சியுமாக இருந்தது என்பதை அவர்களே வெளிப் படுத்தினார்கள். இப்படியான என் கணவருடைய முதல் தெய்வம் அவருடைய அம்மா. இப்படிப்பட்ட ஒருவரை நான் கணவராகப் பெற்றதற்கு முற்பிறப்பில் நான் பெரும் தவம் பண்ணியிருக்க வேண்டும். இவரையிட்டுப் பெருமையாக இருந்தாலும் இவருக்கு முன் சுமங்கலியாக போவதற்கு நான் கொடுத்து வைக்கவில்லை என்பது என் விதி.

இனி வரும் "புதிது சாப்பிடும்" வைபவம் நம் வீட்டில் எப்படி இருக்கப்போகிறதோ தெரியவில்லை. பழைய காலம் மாதிரி எனது கணவர் தயிர், கூழ் தொடக்கம் எல்லா இனிப்பு வகையும் போட்டுப் பிசைந்து அவர் கையினால் எல்லோருக்கும் தருவார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குடும்பமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை வாங்கி எல்லோருமே அமிர்தம் போல் இருக்கிறது என்று சாப்பிடுவார்கள். இனி எங்கள் வீட்டுப் புதிதுண்ணல்......?

சித்திரை வருடப் பிறப்பு வந்தால் அவர்தான் எல்லோருக்கும் மருத்துநீர் வைத்துவிடுவார் இனி மருந்துநீர் வைக்கும் வைபவமும்......?

எங்கள் குடும்பத்தில் அண்ணன் (அன்புமணி) இறந்த பொழுது ஒளி மங்கியிருந்தது. என் கணவரைப் பார்த்து ஓரளவு தேறி இருந்தோம். இப்பொழுது எங்கள் வீடு ஒளியிழந்த வானம் போல் காட்சி தருகிறது. என்னுடைய கணவரின் ஆத்மா எங்கிருந்தாலும் நிம்மதியாகவும், சந்தோசமாகவும் இருக்க வேண்டும். இதுதான் எங்கள் எல்லோரினதும் பிரார்த்தனை.

அன்பு மனைவி
**தவமணிதேவி**

நான் என்ற அகந்தை அழிந்து எப்போதும் இயல்பாய் உள்ள ஆன்மாவைத் தெரிந்து கொள்வது எதுவோ அதுவே உன்னதமான தவம்.

- ஸ்ரீரமண மகரிஷி -

உபதேசம் கேட்க ஆறுமைல் செல்வது பெரிதல்ல, வீடு திரும்பினால் பின் அதைப் பற்றிச் சிந்திக்க 15 நிமிடம் செலவழிப்பதே பெரிது

- பிலில் ஹென்றி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றெழுத்து மந்திரம்

அப்பா எனும் மூன்றெழுத்து மந்திரம். இவ்வுலகிற்கு மூத்த மகனாக என்னை அறிமுகப்படுத்திய தெய்வம் என் அப்பா. இவ்வுலகை எனக்குக் கற்றுத் தந்த ஆசான் என்னப்பா.

பேரிடி இறங்கி உயிர் துடிக்கும் வலி நீங்கள் அனுபவித்திருக்க நியாயம் இல்லை. நவம்பர் முதலாம் நாள் நான் பெற்றேன் அப்பாவை இனிக் காண முடியாத செய்தி. உலகெல்லாம் அழிந்து ஒற்றையாய் நான் மட்டும் நின்றது போன்ற ஓர் உணர்வு. எல்லா தந்தையும் இறப்பர். ஆனால் என் தந்தைக்கு மட்டும் இறப்பே இல்லை என்ற நம்பிக்கையில் விழுந்த இடி. தீர்த்துக் கொள்ளக் கூடிய இழப்பாக இது எனக்குத் தோன்றவில்லை.

குஞ்சுப் பறவைகளுக்குப் பறக்கக் கற்றுத்தந்த பின் அவை தானாக பறக்கும். நான் சற்று அதிக தூரமாகவே சென்றேன். அதனால் என் அப்பா அருகில் இருந்து அவர் அன்பைப் பகிர்ந்து அனுபவிக்கும் காலத்தை வெகுவாகவே இழந்தேன். இருப்பினும் என் இதயத்தில் இறங்கி மனசெல்லாம் நிறைந்திருக்கும் அப்பாவுடன் பிறந்தது முதல் வாழ்ந்தேன். என்னை நோக்கி ஒரு கடுஞ் சொல்லேனும் செலுத்தியதாக ஞாபகமில்லை. எக்காலத்திலும் சிரமம் என்பதை நாங்கள் அனுபவிக்க அவர் விட்டதில்லை.

அப்பாவுடனான பல்லாயிரம் நினைவுகள் அலை மோதினாலும் அவற்றை மொத்தமாக உள்ளடக்க இப்பதிவில் இடம் பற்றாமையினால் அதில் ஒரு சில:

மிகச்சிறு வயதில் அவர் எனக்கு அளித்த முச்சக்கர மிதிவண்டி. பலவர்ணக் குஞ்சங்களுடன் கம்பீரமாக வந்து நின்ற அதனுடன் இரவு நெடுநேரமாகியும் விளையாடிய அனுபவம், கீரிமலைக் கேணியில் அப்பா மடியமர்ந்து நீரில் மிதந்த நினைவு, புலமைப்பரிசில் பரீட்சை சித்தியெய்தியதற்காக அவர் எனக்களித்த பாத அணியும் விபத்தும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





சிங்கப்பூர் விஜயம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை கொள்வனவு செய்து திரும்பும் வழியில் நான் கால் விறைத்து துவிச்சக்கரவண்டிச் சில்லினுள் காலை விட்டுப் பட்ட துன்பத்தில் அவர் பல மாதம் என்னுடன் இருந்தது. விபத்தானவுடன் பயந்து போய் வியர்த்துப் போன அவரின் முகம் இன்னும் என் மனதில் நிழலாடுகிறது.

அவர் பிரிந்த சில நாட்களின் பின் அவர் கோப்புகளை வருடியபோது, முன்பு அவருக்கு நான் எழுதிய சிறு கவிதை ஒன்று பத்திரப்படுத்தப்பட்டிருந்தது. அதில் "மூத்த மகனின் அறிவுலக அனுபவம்" என்ற குறிப்பு எனக்கு ஆஸ்கார் ஆகியது.

அவர் எவ்வளவு அன்பானவர் என்பதற்கு ஒரு சிறு உதாரணம். சிறுவனான நான் சிறு அணில் ஒன்றைப் பிடித்து வீடு வந்து சேர்ந்த உடன் அதை உடனடியாக விடுவிக்குமாறு உத்தரவு பிறப்பித்தார். ஒரு சிறு உயிருக்குக் கூடத் தீங்கு நினைக்காத குழந்தை உள்ளம் அவருக்கு.

அவர் என்னைப் பெயர் சொல்லி அழைத்தது மிகக்குறைவு. மகன் என்றே விளிப்பார். எப்போதும் தொலைபேசி அழைப்பில் அவர் முதலில் கேட்பது "சுகமா இருக்கிறீர்களா?" என்பது.

வெகு தூரத்தில் நான் இருந்த போதும் இறுதி நாட்களில் அவர் அருகே இருக்கும் பாக்கியம் பெற்றது, அவர்பால் நான் வைத்த பாசத்திற்குக் கிடைத்த பேறே. அப்பாவின் உயிர் பிரிந்த நிலையில் இந்த உலகில் அவர் செய்ய வேண்டிய எந்தக் கடமைகளும் நிலுவையில் இருக்கவில்லை. அவரின் ஆன்மா உடலை விட்டு எந்த வேதனையும் இன்றி மெதுவாக அகன்றது. இதுவே அவரது இறைபக்திக்கும் செய்த சேவைக்கும் சான்று.

அப்பா என்ற இந்த மூன்றெழுத்து மந்திரம் எப்போதும் எங்களுடன் பயணிக்கும். இவ்வேளையில், அப்பாவின் இறுதி நாள் வரை அவ்வப்போது அவரைப் பாராட்டிக் கௌரவம் தந்த நம்மவர்க்குச் சிரம் தாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நன்றி!

**இளந்திருமாறன்**

(லண்டன்)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆரையூர்ப் பெருமகன் ஆரையூர் இளவல் மறக்க முடியாத மாமனிதன்

எனக்கு அஞ்சலி உரை எழுதுவார் என்று எதிர்பார்த்திருந்த வேளையில் அவருக்கு என்னை எழுத வைத்தது விதி. இதை தடுக்கவோ எதிர்க்கவோ முடியாது. அன்புக்குரிய அன்புமணியை இழந்த கண்ணீர் காய்வதற்குள்ளே எனது மதிப்புக்குரிய செல்லத்தம்பி ஐயா அவர்களை இழந்தமை கண்களை மேலும் ஈரமாக்கிவிட்டது.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளோடு என்போன்ற அன்பர்களுக்கும் நிழல் கொடுத்துக் கொண்டிருந்த ஆலமரம் விதி என்னும் சூறாவளியால் வேரோடு சாய்ந்துவிட்டது. வேதனைதான். என்ன செய்யலாம்? என்போன்ற பலரையும் வீட்டுவாசலில் கண்டதும் "வாங்கையா!" என்று அன்போடு வரவழைத்துவிட்டு மறுபக்கம் திரும்பிப்பார்த்து "இஞ்ச கேட்டயள" என்று கூறியதும் தேனீர்க் கோப்பையுடன் தவமணி அம்மையார் வந்து கொண்டிருப்பார்.

இதன்பின் எங்களது கலந்துரையாடல் நடைபெறும். தானும் தன் குடும்பமும் என்று சுயநலத்தோடு வாழுகின்ற மனிதருக்குள்ளே தன் பணியை வீட்டுக்கு வெளியேயும் பரவவிட்டவர். வள்ளுவரும் வாசுகியும் போல இல்லறத்தில் வாழ்ந்து, பெற்ற மக்களை ஒழுக்கத்தோடும் உயர் பண்புகளோடும் வளர்த்தெடுத்து சிறந்த பண்புகள் கொண்ட மருமக்களையும் பெற்றுக்கொடுத்து பல பேரன், பேத்திகளோடும் கொஞ்சி விளையாடியவர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இவரது புறவாழ்வுக்குள் புகுந்தால் இவர் தனது ஆரம்பகாலத்தில் அம்பாரையில் பணிபுரியும் போது 50களில் அங்கு இனக்கலவரம் ஒன்று ஏற்பட்டபோது இவரை இவரது மேலதிகாரியான சிங்களவர் பல எதிர்ப்புகளையும், ஆபத்துகளையும் மீறி தனது காரிலே கொண்டு வந்து விட்டவர். இதன் மூலம் இவரது திறமையான, நேர்மையான கடமையையும், மற்றவர்களோடு சேர்ந்து வாழ்ந்த பண்பையும் அறிந்து கொள்ளலாம்.

பின்னர் மஞ்சந்தொடுவாயில் கிராமாதிகாரியாக கடமை ஆற்றியபோது பல காடையர்களை அடக்கி அவர்களை மனிதர்களாக்கியவர். தலைமறைவாகி ஒளித்துத் திரிந்த கொலைகாரனைத் தந்திரமாகப் பிடித்துக் கொடுத்து பொலிசாரதும் பொதுமக்களதும் பாராட்டைப் பெற்றவர். நேர்மையாக, திறமையாக கடமைகளைச் செய்ததன் மூலம் அரசாங்க அதிபர் அந்தோனிமுத்து அவர்களின் பாராட்டையும் பெற்றவர்.

இதன்பின்னர் பிறந்த மண்ணில் கடமையாற்ற வந்து இவர்செய்த பணிகளை முழுமையாக என்னால் எழுத முடியாவிட்டாலும் நினைவிலுள்ள சிலவற்றை எழுதுகிறேன்.

ஆரையம்பதி கந்தசுவாமி கோயிலின் நிருவாகத்தில் சிக்கல் ஏற்பட்டபோது கிராமாதிகாரி என்ற பதவியுடன் மேலதிக அரசாங்க அதிபர் பூ. சங்கரவேல் அவர்களுடன் இணைந்து எதிர்ப்புகளின் மத்தியிலும் வெற்றிகரமாக தீர்வு கண்டவர்.

ஓய்வூதியர் சங்கம், முதியோர் சங்கம், கலாசார சங்கங்களிலும் சேர்ந்து சிறப்பான பணியாற்றியவர். இவ்வாறு சமூக சேவையில் ஈடுபட்டதுமல்லாமல் கலைச்சேவையிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். நாடகத்துறையில் இவர் ஆற்றிய சேவையை இலகுவில் மறக்க முடியாது. பல நாடகங்களை தானே எழுதித் தயாரித்து கிழக்கில் புகழ் பெற்றவர். இவரது நாடகங்களில் அரசாங்க ஊழியர் பலரும் நடித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கிழக்கு மாகாணத்தில் பல ஊர்களிலும் இவரது நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன. ஒருநாள் இவரது நாடகத்தின் சிறப்புக் காரணமாக ஒரு ஊரில் இரண்டு காட்சிகள் அரங்கேற்றியதாக என்னிடம் கூறியுள்ளார். இது மட்டுமல்லாமல் கிழக்கிலே முதல் முதலாக குறுந்திரைப்படமும் தயாரித்தவர். 'மண் சுமந்த மகேசன்" என்ற இப்படம் தாழங்குடா பிள்ளையார் ஆலயத்தையும் மட்டக்களப்பு வாவியையும் மையமாகக் கொண்டு தய-ாரிக்கப்பட்டது. இதில் நானும் நடித்துள்ளேன்.

இத்துடன் இவர் எம்மண்ணுக்கு ஆற்றிய சிறந்த பணி, காத்தான்குடி - ஆரையம்பதிக்கிடையில் ஏற்பட்ட இனக்கலவரத்தில் சமாதானக் குழுத் தலைவராக இருந்து ஆற்றிய பணியாகும். கிராம சேவகர்கள், அரசாங்க ஊழியர்கள், ஊர்ப் பொதுமக்கள் எனப் பலரடங்கிய ஒரு குழுவை அமைத்து இரவு பகலாகத் தொண்டாற்றியதாகும். இக்குழுவில் நானும் ஒரு அங்கத்தவனாக இருக்தேன். காத்தான்குடி சமாதானக் குழுவினருடன் இணைந்து சிறப்பாகப் பணியாற்றியவர். இக்குழு ஊர் மக்களிடையே ஏற்பட்ட பல பிணக்குகளையும் தீர்த்துவைத்து அமைதி காத்தது.

சுபத்திரை கலியாணம் என்ற வடமோடி நாட்டுக் கூத்தை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினர் இவரது வீட்டுக்கு வந்து ஒலிப்பதிப்பு செய்து சென்று வானொலியில் பத தடவை ஒலிபரப்புச் செய்தனர். இதில் இளவல் அவர்கள் கிருஷ்ணராகவும், அன்புமணி அவர்கள் பலராமராகவும், திருமதி தங்கம்மா சந்திரசேகரம் அவர்கள் சுபத்திரையாகவும் நான் அர்ச்சுனனாகவும் நடித்தோம். சுருக்கமாகச் சொல்லப் போனால் இவரது வீடு ஆரையம்பதியின், கலைக்கூடமாகவும், சமூகப் பணியாளர்களின் அலுவலகமாகவும் கலைஞர்களும் சமூகப் பணியாளர்களும் சந்திக்கும் மத்திய நிலையமாகவும் அமைந்திருந்தது. இவரைப் போல் பல துறைகளிலும் பணியாற்றிய ஒரு கலைஞன் ஆரையம்பதி மண்ணில் பிறப்பானோ தெரியாது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





இல்லறத்தில் 50 ஆண்டு பூர்த்தி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரையம்பதி கலைப்பூங்காவுக்கு தமிழ் மழை பொழிந்து வந்த தமிழ் மேகம் பறந்துவிட்டது. அன்புமணி, ஆரையூர் இளவல் என்ற இரு சிறகுகளுடன் கலைவானில் பறந்து திரிந்த நான், என் இரு சிறகுகளும் ஒடிந்துவிட்ட வேதனையிலும் என் உடல் நிலை மோசமான நிலையில் இருந்தாலும் எழுதுகிறேன். இவரைப் பற்றி எழுதுவதாயிருந்தால் எவ்வளவோ எழுதலாம். என் நினைவில் வந்தவற்றை மட்டுமே என்னால் எழுத முடிந்தது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறேன்.

"மூனாக்கானா"

**மு. கணபதிப்பிள்ளை**

வேளாளர் வீதி,

ஆரையம்பதி - 01

அன்பின் மூலமாகச்
செய்யப்படும் ஒவ்வொரு செயலும்
ஆனந்தத்தைக் கொண்டு
வந்தே தீரும்
- சுவாமி விவேகானந்தர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவலுக்கோர் இரங்கற்பா...

செல்லத்தம்பி ஐயா நீங்கள்
சிவபதம் அடைந்து இன்று
கண்ணீரில் முப்பது நாள்
கரைந்தோடி மறைந்ததையா

கிராம சேவகராய்
அயராது சேவை செய்து
அனைவரின் உள்ளத்திலும்
ஆழமாய் இடம் பிடித்தாய்

வெள்ளை வேட்டி நேசனலும்
விரும்பி நீ அணியும் ஆடை
கள்ளமில்லா உன் உள்ளத்தை
காட்டும்இச் செயல் அல்லவோ

நாடக மேடையிலே
நடித்தாய் பல நாடகங்கள்
நீறுபூத்த நெருப்புத் தொடர்
நெஞ்சை விட்டு மறையா தென்றும்

பாசமுடன் குழந்தைகளிடம்
பணிவிடைகள் பலவும் செய்து
நேசக்கரம் நீட்டி
நிமிர்ந்தவரை வாழச் செய்தீர்

கடமையைச் செய்வதிலும்
கடவுளைத் தொழுவதையும்
கடமை எனக் கொண்ட எங்கள்
கருணையின் வடிவம் நீங்கள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மண்ணுலகில் மாந்தற்கு

மறுபிறவி உண்டென்றால்

வந்திடய்யா எங்களுடன்

வாழ்ந்திடுவோம் ஒன்றாய் இங்கு

அந்தியேட்டி தினமாம் இன்று

அனைவரும் நாம் ஒன்றுகூடி

ஆண்டவனை வேண்டுகிறோம்


உங்கள் ஆன்மா சாந்தி பெற

ஓம் சாந்தி...! சாந்தி...!! சாந்தி...!!!


**எஸ். நல்லதம்பி**

அன்புமணி வீதி,

ஆரையம்பதி - 01




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண் சென்ற மேலோன்!

அமரத்துவம் அடைந்த நண்பர் கந்தப்பன் செல்லத்தம்பி அவர்களைப் பற்றிச் சிந்திக்கும்பொழுது பலவாறான எண்ணங்கள் எனது மனதைத் தொட்டு நிற்கின்றன.

இவர், எனது பாடசாலை நண்பர். நீண்டகால நெருக்கமான உறவினர். பிற்கால் இறுக்கமான சம்பந்தியுமானவர்.

அமரர் செல்லத்தம்பி அவர்களைப் பற்றிச் சுருங்கக் கூறுவதாயின், அவர் ஒரு

| | |
|---|---|
| சிறந்த மனிதர் | சிறந்த கணவர் |
| சிறந்த தந்தை | சிறந்த மாமனார் |
| சிறந்த பாட்டனார் | சிறந்த கவிஞர் |
| சிறந்த நாடகாசிரியர் | சிறந்த நடிகர் |
| சிறந்த எழுத்தாளர் | சிறந்த ஆய்வாளர் |
| சிறந்த பேச்சாளர் | சிறந்த பக்தர் |
| சிறந்த அறிஞர் | சிறந்த பண்பாளர் |

என்று அடுக்கிக் கொண்டே போகலாம். இவர் ஐந்து பெண் மக்களையும் நான்கு ஆண் மக்களையும் பெற்றெடுத்த பாக்கியவான் ஆவார். இவ்வாறான பெருஞ்செல்வம் அனைவருக்கும் கிடைப்பது அரிதாம்.

இவரால் படைக்கப்பட்ட நாடகங்கள் சிறப்பான மனித வாழ்வுக்கு வழிகாட்டுவனவாக அமைந்திருக்கின்றன.

இவரால் எழுதப்பட்ட கவிதைகளும் உயர்வான மனித வாழ்விற்கு அவசியமான கருப்பொருள்களை உள்ளடக்கியனவாக இருப்பதை அவதானிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் கட்டுரைகள் யாவும் பெறுமதிமிக்கன. எந்தவொரு விடத்தையும் பற்றி ஆழமாகச் சிந்தித்து, அகலக்கால் விரித்து ஆராய்ச்சி நோக்குடன் எழுதியிருப்பார். சாதாரணமாக, நமக்குத் தெரியாத பல புதிய கண்டுபிடிப்புகளை அவரின் கட்டுரைகளின் மூலம் தெரிந்து கொள்ள முடியும். பேசுவதென்றால் எந்த விடயத்தைக் கொடுத்தாலும் அந்தத் துறையில் பொருட்பொலிவுடனும் கருத்துச் செறிவுடனும் சொல்லாட்சியுடனும் இன்சுவை சேர்த்து இனிக்க இனிக்கப் பேசுவார். அவரின் பேச்சு செவிக்கும் சிந்தைக்கும் நல்விருந்தாக அமையும்.

எந்த விடயத்தையும் அளவுக்கதிகமாகப் பேசமாட்டார். ஆதலால் கேட்போருக்கு அலுப்புத்தட்டாத வகையில், அவர்கள் கேட்டு வியக்கும் வண்ணமாகப் பேசுவதில் வல்லவராகத் திகழ்ந்தார்.

இவர்,அரச பணியாற்றிய காலங்களிலும், பொதுப்பணிகளில் ஈடுபட்ட வேளைகளிலும் மனிதப் பண்பு கனிந்த ஒருவராக விளங்கினார். அதிகாரச் செருக்கோ அல்லது வித்துவச் செருக்கோ இவரிடம் துளிகூடத் காணப்படவில்லை. எவரெவருக்கு எந்தெந்த விதங்களிலெல்லாம் உதவவும் ஒத்துழைப்பு வழங்கவும் முடியுமோ அவரவருக்கு அந்தந்த வகையில் மனிதநேயத்துடன் உதவிய பெருமைக்குரியவராவார். அவ்வாறே இவரின் மனைவியும் மக்களும் ஏனையோரும் எல்லோருடனும் எக்காலத்திலும் மனித நேயத்துடனேயே நடந்து கொள்வதையும் குறிப்பிட வேண்டும்.

இறைநம்பிக்கையும் சாந்த குணமும் சமயோசித புத்தியும் நல்லொழுக்கமும் இவரை நன்றே வழிநடத்தின என்று துணிந்து கூறலாம்.

இவரின் வாழ்க்கை மற்றவர்களுக்கு முன்மாதிரியான ஒன்றாகும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆதலால் இவர் பின்பற்றிய வாழ்க்கை முறைகளும் இவரால் ஆக்கப்பட்ட படைப்புகளும் நமது வருங்காலச் சந்ததியினருக்காக முறையாக ஆவணப்படுத்தப்படுவது நன்மை பயக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விமான்கள் இதனைக் கருத்திற் கொள்வார்களாக!

அமரர் அவர்களைப் பிரிந்து துயருறும் அன்னாரது குடும்பத்தினர் மனத்திடமும் நம்பிக்கையும் அமைதியும் அடைய எல்லாம் வல்ல இறைவனின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**சி. க. பொன்னம்பலம்**

த. சி. வீதி, ஆரையம்பதி – 01

பொய் சொல்லி தப்பிக்க நினைக்காதே
உண்மையைச் சொல்லி மாட்டிக்கொள்
ஏனென்றால் பொய் வாழவிடாது
உண்மை சாக விடாது.
– சுவாமி விவேகானந்தர் –



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமரர். க. செல்லத்தம்பி ஐயா அவர்களைப் பற்றி...

ஆரையூர் தோற்றுவித்த ஓர் ஆலவிருட்சம் திரு. கந்தப்பன் செல்லத்தம்பி அவர்கள். பல சாதனைகளை தனதாக்கிட சிறு பிராயத்திலேயே திடம் கொண்டார். அவருக்குள் இருந்த கலையாற்றல் அவரை சாதனை பயணத்தில் வழிநடத்தியது. பாடசாலைக் காலத்திலேயே அருள்மிகு விபுலானந்த அடிகளாரின் பாராட்டுக் கரங்கள் அவரை அரவணைத்தன. இதன் தொடர்ச்சி பல விருதுகள் அவர் கரம் சேர காத்திருந்தது எனலாம். கலையையும் கல்வியையும் அவரது இரு கண்களாய் போற்றினார். கல்வியில் சிறந்து விளங்கி கிராம உத்தியோகத்தராக கடமையாற்றி தனது சேவையினை சிறப்பாகச் செய்தார்.

ஆரையூர் இளவல், இறையடியான் என்ற புனை பெயர்களுக்கு சொந்தக்காரராகிய திரு. செல்லத்தம்பி அவர்கள் நாடகம், இலக்கியம், கிராமியக் கலைகள் என அனைத்து துறையிலும் சிறந்த விளங்கி ஓர் பல்துறைக் கலைஞனாக தன்னை பரிணமித்துக் கொண்டார். கலாபூசண விருது, முதலமைச்சர் விருது, கிழக்குப் பல்கலைக்கழக விருது எனப்பல விருதுகள் அவர் கரத்தை வந்தடைந்தன.

சிறந்த கலைஞராக மட்டுமன்றி ஒரு சிறந்த சமூக ஆர்வலராகவும் இவர் விளங்கியுள்ளார் எனலாம். பல சமூக தாபனங்களிலும் உறுப்பினராக பதவி வகித்துள்ளார். மேலும் பிரதேச கலாசார பேரவை, கலாசார அதிகாரசபை என்பவற்றிலும் பதவிகளை வகித்து கலைக்காக பணியாற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. நெருக்கடியான காலகட்டங்களிலும் பிரதேசத்தின் சமூகங்களின் ஒன்றிய வாழ்விற்காக இவர் ஆற்றிய பங்களிப்பு காலத்தால் அழியாதது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த மூத்த கலைஞராகவும் சமூக ஆர்வலராகவும் விளங்கிய செல்லத்தம்பி ஐயா அவர்கள் மேடைப்பேச்சிலும் சளைத்தவரல்ல.

இன்று அவரது இழப்பால் பல மேடைகள் அவரது பேச்சுக்கும் நடிப்பிற்கும் ஏங்கி நிற்பது போல நாமும் ஓர் சிறந்த மனிதராகிய திரு. க. செல்லத்தம்பி அவர்களது பிரிவால் மிகுந்த மனத்துயர் அடைந்து நிற்கின்றோம்.

**திருமதி. ந. சத்தியானந்தி**
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம், மண்முனைப்பற்று,
ஆரையம்பதி

நாம் இப்போது இருக்கும்
நிலைமைக்கு நாமே பொறுப்பாளிகள்.
நாம் எப்படி எல்லாம்
இருக்கவேண்டும் என்று
விரும்புகின்றோமோ அப்படி
நம்மை அமைத்துக்கொள்ளும்
ஆற்றல் நம்மிடமே இருக்கிறது.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையாதவர்...

மட்டக்களப்பு மாவட்டத்தின் கலை, இலக்கிய வளர்ச்சியில் ஆரையம்பதி பிரதேசத்துக்கு முக்கியமானதும் தனித்துவமானதுமான ஓரிடம் வரலாற்றில் இருந்து வந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தை பிற பிரதேசத்தவர்க்கு சரியாக இனங்காட்டிய அன்புமணி, தமிழ்நாட்டிற்கு இனங்காட்டிய நவம், மொழியுணர்ச்சிக் கவிதையில் முக்கியமான இடத்தைப் பிடித்துக் கொண்ட ஆரையூர் அமரன், பிற பிரதேசத்து இலக்கிய ஆர்வலர்களுக்கும் மொஸ்கோ அனுபவத்தை எடுத்துக் கூறிய சபாரெத்தினம் ஆகியோர் மறைந்தும் மறையாத வர்களாக இருக்கிறார்கள். அந்த வரிசையில் சேர்ந்தவர்தான் இன்று நாங்கள் நினைவுகூரும் ஆரையூர் இளவலும்.


தனித்துவமான "நீறு பூத்த நெருப்பு" போன்ற நாடகங்களைத் தந்த விதம், நெடும்பாடல் ஊடாக முழக்கம் முருகப்பாவின் குரலில் விபுலானந்தரை என்றென்றும் வாழவைத்தமை, நாட்டார் பாடலொன்றை எப்படியோ இனங்கண்டு, அதனூடாக ஆரையம்பதியின் தொன்மையை நிறுவியமை, இவை அனைத்துக்கும் சிகரம் வைத்தாற்போல அன்றைய காலத்துக் கருவிகளை வைத்துக் கொண்டு தனது மூளையைக் கசக்கிப் பிழிந்து, மாணிக்கவாசகர் பற்றிய குறும்படமொன்றைத் தந்து இன்று வரை பலரையும் வியப்பிலாழ்த்தியுள்ளமை, தனக்கு வாரிசாக கவனத்துக்குரிய, பெண்ணியவாத நோக்குடைய கவிஞை ஒருத்தியை ஈழத்து இலக்கிய உலகுக்கென விட்டுச் சென்றமை - என்ற விதங்களிலெல்லாம் நோக்கும்போது ஆரையூர் இளவலின் உடல் மட்டுமே மறைந்துள்ளதேயொழிய அவரது உயிர் ஆன்மா என்றென்றும் மறையாது என்பதைத் துணிந்து கூறமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சாதாரண கிராம உத்தியோகத்தராக இருந்துகொண்டு அத்தொழிலிலும் நன்மதிப்பைப் பெற்று மேற்கூறியவற்றை யெல்லாம் சாதித்த ஆரையூர் இளவலது தற்காலிக மறைவுத் துயரில் உங்கள் அனைவரோடும் நானும் பங்கு கொள்கின்றேன்.

பேராசிரியர்
**செ. யோகராசா**
முன்னாள் மொழித்துறைத்தலைவர்
கிழக்குப் பல்கலைக்கழகம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிடத்தை விட்டுச் சென்றுள்ள இழப்பு

கலை, இலக்கிய வட்டாரங்களில் " ஆரையூர் இளவல்" என அறியப்பெற்ற அமரர் கந்தப்பன் செல்லத்தம்பி அவர்கள் சுமார் பத்துவருடங்களுக்கு முன்னர்தான் எனக்கு அமரர் அன்புமணி இரா.நாகலிங்கம் அவர்களின் மைத்துனராக அறிமுகமானார்.

வெள்ளைவேட்டி, மேலங்கி, சால்வையுடன் நெற்றியிலே திருநீறு சந்தனப் பொட்டுடன் அன்று இவரது பொலிவான - மங்கலமான தோற்றம் இவரது நல்ல உள்ளத்தைக் காட்டியது. முகம் மலர்ந்த சிரிப்பு அவரது முத்திரை. அளவான - அழகான பேச்சு. எடுத்த எடுப்பிலேயே எனக்கு அவரைப் பிடித்துப் போய்விட்டது.

மட்டக்களப்பிலிருந்து 2008 ஜனவரியில் தன் கன்னி இதழை விரித்த "செங்கதிர்" மாதாந்தச் சிற்றிதழின் கிரம-மான சந்தாதாரராக அவர் விளங்கினார். 2013 ஜனவரியில் செங்கதிர் தனது அறுபத்தியொராவது இதழுடன் தன் வருகையை நிறுத்திக் கொள்ளும்வரை அமரர் ஆரையூர் இளவல் அவர்கள் அதன் தொடர் வாசகராகவே இருந்தார். கலை, இலக்கிய முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கும் மனப்போக்குடையவர்.

1935ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27ஆம் திகதி பிறந்த அவர், 2010இல் பவளவிழாக் கண்டபோது 2015 மார்ச் மாதச் செங்கதிர்" (வீச்சு - 27) அவரது படத்தை அட்டைப்படமாகப் போட்டு அவர் பற்றி " இவர்கள் நம்மவர்கள்" பாகம் - 03" நூலில் வெளிவந்திருந்த கட்டுரையைப் பிரசுரித்தது. இவ்விதழில் "இனிக்கும் இன்ப நினைவுகள்" எனும் கட்டுரையையும் ஆரையூர் இளவல் எழுதியிருந்தார்.

சிறந்த நாடகக்கலைஞரான தான், அதுவரை எழுதி, இயக்கி மேடையேற்றிய எண்பத்தியேழு நாடகங்களில் "நீறுபூத்த நெருப்பு" எனும் இதிகாச நாடகம் 1972 தொடக்கம் 1980 வரை மட்டக்களப்பில்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பல முக்கிய நகரங்களிலும் கிராமங்களிலும் 36 தடவைக்கு மேல் மேடையேற்றப்பெற்று பாராட்டுப்பெற்ற தகவலைப் பதிவு செய்துள்ளார். மகாபாரதக் கதையின் ஓர் பகுதியைக் கருவாகக் கொண்டு எழுதப்பெற்ற இந்த நாடகம், வாழ்வியல் யதார்த்தங்களை மக்கள் மனதில் பதிய வைக்கும் உயரிய நோக்கத்துடன் தயாரிக்கப்பட்டது என்றும் "சமாதான சகவாழ்வினால் மட்டுமே இவ்வுலகில் அமைதியை ஏற்படுத்த முடியும்" என்பதே அந்நாடகத்தின் செய்தியாகும் என்றும் இக்கட்டுரையில் அவர் குறிப்பிட்டுள்ளார். ஆம்? தமது சொந்த வாழ்விலும் சமாதான சகவாழ்வை யாசித்தும் நேசித்தும் வாழ்ந்த நல்ல மனிதர் தான் அமரர் ஆரையூர் இளவல் அவர்கள்.

1948ஆம் ஆண்டு மட்டக்களப்பு அரசடி மகா வித்தியாலயத்தில் இவரால் எழுதி தயாரித்து, மேடையேற்றப்பெற்ற "இராமஇராச்சியம்" எனும் நாடகமே நாடகத்துறையில் இவரது கன்னிப்படைப்பாகும்.

புராணநாடகங்கள், இதிகாச நாடகங்கள், இலக்கிய நாடகங்கள் வரலாற்று நாடகங்கள், சமூகநாடகங்கள் என எண்பத்தியேழு நாடகங்களை எழுதித் தயாரித்து மேடையேற்றிய இவர், அவற்றில் பன்ரெண்டு நாடகங்களில் நடித்தும் உள்ளார்.

அலங்காரரூபன் (தென்மோடி) - 1971, சுபத்திரா கல்யாணம் (வடமோடி) - 1972 ஆகிய கூத்துக்களும் அவரால் தயாரிக்கப்பெற்று மேடையேற்றப் பெற்றவை.

கிழக்கிலங்கையில் முதல் முயற்சியெனப் போற்றப் பெறும் சின்னத்திரை வீடியோ நாடகமானது "மண் சுமந்த மகேசன்" (மாணிக்க வாசக சுவாமிகளின் தரிசனம்) 1980 இல் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை தினத்தன்று முதலாவது காட்சிக்கு விடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐந்து தலை நாகம்" எனும் தலைப்பில் 1952ஆம் ஆண்டு "சுதந்திரன்" பத்திரிகையில் இவரது முதலாவது சிறுகதை பிரசுரமானது. இருபத்தைந்துக்கு மேற்பட்ட சிறுகதைகளையும், ஐம்பதுக்கு மேற்பட்ட கட்டுரைகளையும், நூற்றுக்குமேற்பட்ட கவிதைகளையும் இரண்டு நாவல்களையும் இவர் எழுதியுள்ளார்.

ஸ்ரீலங்கா அரசினால் வழங்கப்பெறும் உயரிய விருதான "கலாபூசணம்" விருதினை 2011ஆம் ஆண்டில் பெற்ற இவர், ஆரவாரம் இல்லாமல், விளம்பரங்களைத் தேடி ஓடாமல், புகழை வலிந்து நாடாமல் தனது வாழ்வில் அமைதியாக இருந்து கலை, இலக்கிய வேள்வி நடாத்திய ஓர் உன்னதமான படைப்பாளியாவார்.

அமரர் ஆரையூர் இளவலின் மரணமும் அவரது மைத்துனர் அன்புமணி இரா. நாகலிங்கம் அவர்களின் மறைவைப் போலவே மட்டக்களப்பு மாநிலத்தின் கலை, இலக்கியச் செயற்பாடுகளில் ஒரு வெற்றிடத்தை விட்டுச் சென்றுள்ளது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

**செங்கதிரோன்**
**த. கோபாலகிருஸ்ணன்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொட்டிட்ட பொற்குடம் போனதெங்கே...?

பொன்னான ஆரைநகர் அன்னைக்கன்று
பொட்டிட்ட பொற்குடத்தி லொன்றின்று
மண்வாழ்வு விட்டுப்போன மாயமென்று
மண்டலமே அழுகிறது தேம்பி நின்று
உத்தமி மனையாள் உள்ளம் ஏங்க
பொற்புடை பிள்ளைகள் புலம்பி நிற்க
உற்ற நண்பர்கள் சொந்தபந்தங்களேங்க
எங்கு சென்று மறைந்தாயோ இத்தரைவிட்டு!

மங்கை தவமணிதேவி மனைவியோடு
மதுரைத் தமிழ் நடை இல்லறமாம்
தோன்றல்கள் நவமணிகள் கல்வியிலே
துலங்கிட கல்வியோடு நல்வாழ்வுகாட்டி
ஒப்பற்ற நாடக நடிப்பு பேச்சுத் துறைகளிலே
விட்டகலாச் சாதனைபடைத்த சான்றோனானாய்
விண்ணுலகோர் மலர் தூவி வாழ்த்த
மண்ணுலகை விட்டு பொன்னுலகம் புகுந்தனையோ?

ஆரையூர் அன்னைக் கணிசெய்த
ஆரையூரிளவல் கலைஞன் புகழ்
மானிலம் உள்ளவரை யொரு நாளும்
மறையாது மாண்புடனே வாழும்
தேற்றரசத் தோற்றக் கலைஞனுன்னை
கூற்றுவன் கொண்டு சென்ற கொடிய
செய்திகேட்டு மட்டுநகர்க் கலைஞரெல்லாம்
செய்வதறியாது சோகத்தில் மூழ்கிநின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை எனும் நாடக மேடையிலே
வாங்கி வந்த பாத்திரத்தை தரணி போற்ற
மாண்புடனே மனநிறைவாய் நடித்துக்காட்டி
பாங்கான பலநாடகங்கள் மேடையேற்றி
ஓங்கு புகழ் உச்சிதனைத் தொட்டுவிட்டு
ஈசனடி ஏகினீரோ எல்லாம் துறந்துவிட்டு
நேசமுள்ள உங்கள்கலை மலர்கள் வீசும்
வாசமது மறையா இம்மண்ணை விட்டு

எண்ணற்ற கலைப் படைப்புக்களை
வண்ணமுற வடிவமைத்துத் தந்தவுங்கள்
மண்சுமந்த மகேசன் குறும்படமே
என்றென்று முங்கள் புகழ் சான்றதாகும்
செய்திட்ட சொற்பொழிவுகள் மக்கள்
சிந்தையில் சிலையிலெழுத் தாயிருக்க
உங்கள் அழியாத கோலத்தை யகத்திலிட்டு
சென்றீரோ...? சொர்க்கலோகம் வீற்றிருக்க.

அன்பு முகம் மறைந்தாலும் அழியாது
உங்கள் நினைவலைகள் மனத்திரையிலிருந்து
கண்முன்னே வாழ்ந்தகாலம் கனவானாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம் உயிர்வாழும்
எந்நாளும் கலையிலக்கிய சமூக முள்ளவரை
சென்றிடாதுங்கள் இனியவுணர்வலைகள்
இம்மண் மாதா இறுதி மூச்சு உள்ளவரை
உங்கபேர் சொல்லியவ விதயம் துடிக்கும்

**மூ. அருளம்பலம்**
(ஆரையூர் அருள்)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஊரே பேர் சொல்லிப் பேசும்
# பெருந்தகை செல்லத்தம்பி விதானையார்

ஆரையம்பதியிலே பிறப்பெடுத்தார்.

அல்லும் பகலும் ஊரின் உயர்வையே நினைத்து வாழ்ந்தார்.

கலையுலக வாழ்விற்கூடாக

பிறந்த மண்ணிற்குப் பெருமை சேர்த்தார்.

அகவை எண்பதையும் விஞ்சி பிறந்த மண்ணிலே

வித்தானார் செல்லத்தம்பி விதானையார்.

பெருமை அவருக்கல்ல.

பெருமை பெறுகிறவர்கள் நாம்தான்.

மூன்று தளங்களில் அவரை நோக்குகிறேன்.

கிராம சேவையாளர்

ஊர்த் தொண்டன்

கலையுலக ஜாம்பவான்

## கிராம சேவையாளர்

அரச சேவைகளில் அர்ப்பணம் நிறைந்த மக்கள் சேவை கிராம சேவையாளர் பதவி. ஆற்றிடும் அர்ப்பணம் நிறைந்த சேவையால் அச்சேவைக்கு புகழ் சேர்ப்பவர்களும் உண்டு. சேவையின் தரத்தையே அர்த்தமற்றதாக மாற்றிடுவோரும் உண்டு.

ஆனால் அர்ப்பணம் நிறைந்த சேவையால் கிராம சேவையாளர் பதவிக்கு இலக்கணம் வகுத்தவர் செல்லத்தம்பி விதானையார். கிராமமொன்றில் வாழும் மக்களின் சமூக, பொருளாதார, கல்வி நிலைமைகளை நன்றாக அறிந்து அதற்கேற்ப அம்மக்களுக்கு சேவையாற்றுபவர்கள் கிராம சேவையாளர்கள் என்றால் அது மிகையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வூரில் வதியும் மக்களின் சிறந்த ஒழுக்க விழுமியங்களை சான்றுப்படுத்துவது தொடக்கம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வதியும் மக்களுக்கு அரச உதவிப்பணம் பெறுவதற்கான சிபார்சுகளை வழங்குவது ஈறாக அவர்கள் சேவைகள் பரந்துபட்டன.

செல்லத்தம்பி விதானையார் அச்சேவைகளை பாகுபாடின்றி வழங்கியதனால் அவர் எங்கெங்கு பணியாற்றினாரோ அங்கெல்லாம் மக்களால் வெகுவாகப் பாராட்டப்பட்டவர்.

கிராம சேவையாளர் ஒருவர் விருப்பு, வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டவர். அரசியல்சார் நடவடிக்கையில் ஈடுபடாதவர். சாதி, சமயம், பொருளாதார நிலைமை சாராதிருப்பவர். எல்லாவற்றிற்கும் மேலாக எதனையும் மக்களிடம் எதிர்பார்த்துக் கடமையாற்றாத - அதாவது கையூட்டெதுவும் பெற்றிட நினைக்காத - பண்பு நிறைந்தவராகவிருப்பவர்.

மேற்குறிப்பிட்ட அத்தனை பண்புகளையும் சிரமேற் கொண்டொழுகி கிராம சேவையாளர் பதவிக்கு செல்லத்தம்பி விதானையார் இலக்கணம் வகுத்து வாழ்ந்தவர். அவருடைய இறுதிநாள் நிகழ்வு அதற்குச் சான்று பகர்ந்ததை நலம் கண்டு வியந்தோம்.

## ஊர்த் தொண்டன்

தொண்டென்பது கருவிலே உருப்பெற்றெழுவது. அதற்கென்றொரு மனம் வேண்டும். எல்லோரிடமும் எதிர்பார்க்க முடியாதது. போற்றுவார் போற்றட்டும், புழுதிவாரித் தூற்றுவார் தூற்றட்டும் என்ற மனப்பக்குவம் வேண்டும். அதற்கென்று பிறப்பெடுக்க வேண்டும். அப்படிப் பிறப்பெடுத்தவராகவே செல்லத்தம்பி விதானையாரை நான் பார்க்கிறேன்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆரையம்பதியின் அபிவிருத்தி தொடர்பான அத்தனை செயற்பாட்டிற்குள்ளும் செல்லத்தம்பி விதானையாரின் பங்களிப்புகள் பிரமாதம். அவருடைய சமூக சேவைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் இரண்டு விடயங்களைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

ஆரையம்பதி அபிவிருத்திக் கழகம் என்னும் அமைப்பை உருவாக்கி அதன் தலைமைப் பொறுப்பெடுத்து நான் செயற்பட்ட காலம். 1985 என்று நினைக்கின்றேன். ஊர்ப்பற்றாளர்கள் பலர். அதனோடிணைந்து செயற்பட்டவர்கள். எங்களின் முதற்பணி என்பதற்கப்பால் தலையாய பணியும் கூட மயானத்தை வேறிடத்திற்கு மாற்றுதல். நமக்கெல்லோருக்கும் தெரியும். நமதூர் மயானம் ஆரையம்பதி மகா வித்தியாலயத்திற்கு முன்பாக அமைந்திருந்தது.

தற்போது ஆரையம்பதி பிரதேச சபை மண்டபம், சிறுவர்களுக்கான பொழுதுபோக்கு அமைவிடம், கடைத் தொகுதி, நீர் வடிகால், வழங்கல் அபிவிருத்திச் சபைக்கான பணியிடம் ஆகியன அமைந்திருப்பதை நாம் கண்டு மகிழ்கிறோம். அந்த மயானத்தினை அங்கிருந்து இடமாற்றி கடற்கரைப்பக்கமாகக் கொண்டு செல்லும் மிகப்பாரிய, நெருக்கடிமிக நிறைந்த பணியினை முன்னெடுத்தோம்.

அந்தக் காலகட்டம் விடுதலைப் போர் கொழுந்து விட்டெரிந்துகொண்டிருந்த நேரம். பாரிய அச்சுறுத்தல்களுக்கு முகம்கொடுத்து அப்பணியினை முன்னெடுத்தோம். அந்த செயற்பாடனைத்திற்கும் தேவையான சட்ட, நிர்வாக ஆலோசனைகளைத் தந்துதவி, ஆக்கமும் ஊக்கமும் தந்தவர்களில் செல்லத்தம்பி விதானையார் முதன்மையானவர். அவர்களிலொருவராக விளங்கியவர்களில் அமரர் அமரசிங்கம் ஐயாவையும் இவ்விடத்தில் நினைவு கொள்வது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பகுதியில் எங்கள் கழகம் குடியேற்றங்களை உருவாக்கியதோடு தற்போது பிரபல்யமாக விளங்கும் அம்மன் கோயிலையும் உருவாக்கி, அங்குள்ள பாடசாலையையும் அமைப்பதற்கான ஆரம்பக்கட்ட செயற்பாடுகளை அமரர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்களூடாக மேற்கொண்ட போதும் அக்காரியம் எங்களால் முடியாமல் போனது.

எங்களைத் தொடர்ந்து ஊரில் உருவாகிய சமூக அமைப்பொன்று மேலும் மயானத்தை கடற்கரைக்கு அருகாமையில் கொண்டு சென்றதோடு அங்கு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளில் பங்கொண்டுழைத்தவர்களை இவ்விடத்தில் மனம்கொள்வது சாலப் பொருத்தமே.

ஆக செல்லத்தம்பி விதானையார் பங்கெடுத்த இந்தப் பணி ஒரு வரலாற்றுப் பணியாகும்.

## மேலும் சமூகப் பணி

விடுதலைப் போராட்டம் நெருப்பாய் எரிந்து கொண்டிருந்த காலச் சூழல். பல விதமான சமூகப் பிரச்சினைகள் தலைகாட்டத் தொடங்கின. பிரச்சினைகளுக்குத் தீர்வின்றி மக்கள் திண்டாடினார்கள். எனவே அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடுவர் மையமொன்று செல்லத்தம்பி விதானையார் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

அவரது வீடே நீதிமன்றம். நள்ளிரவையும் தாண்டி விசாரணைகள் தொடரும். அவரது செயற்பாடுகளுக்கு மனைவி மக்களும் போதிய ஒத்துழைப்பு வழங்கியது இன்றும் நினைவு கொள்ளத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் இணைந்து தலைமைப் பொறுப்பேற்று இயங்கிய சமூக அமைப்புக்கள்:

1. கிராம சேவகர் சங்க உபசெயலாளர்
2. மண்முனைப் பற்று பிரதேச சிரேஷ்ட பிரசைகள் சங்க செயலாளர்
3. ஓய்வூதியர் சங்கத் தலைவர்
4. ஆரையம்பதி - 1 ஸ்ரீ கந்தவேள் முதியோர் சங்கத் தலைவர்
5. கலை, கலாசார சபையின் உறுப்பினர்.

## கலையுலக ஜாம்பவான்

இயல்பாகவே அவருக்குள் இருந்த கலையாற்றல் கலையுலகில் அவரை உச்சத்திற்கே கொண்டு சென்றது. கலையுலகில் கால்பதித்த செல்லத்தம்பி விதானையார் வெளிப்படுத்திய தன் திறமைகளால் ஆரையூர் இளவல் என்ற நாமம் கொண்டு பிரபல்ய மானார். நாடகங்களை எழுதுவது, நெறியாள்கை செய்வது, பொருத்தமான பாத்திரமேற்று நடிப்பது என்று பல தரப்பட்ட திறமைமிக்க நாடகத் தயாரிப்பாளராகத் திகழ்ந்தவர். சமூக, சரித்திர, இதிகாச நாடகங்களை மேடையேற்றிப் புகழ்பெற்றவர்.

அவருடைய கலைப் படைப்புக்களை பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

**வானொலி நாடகங்கள் :**

1. குடும்பம் ஒரு கோயில்
2. விடிந்தால் தீபாவளி
3. மாமியார் வீடு

**அவ்வாறே தொடரும் அவரது படைப்புக்கள்**

1. வினைதீர்க்கும் வினாயகன்
2. குழந்தைக் குமரன்
3. பிட்டுக்கு மண் சுமந்த பெருமானார்
4. கற்பனை கடந்த ஜோதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புராண நாடகங்கள்**

5. (இன்றும் பேசப்படும்) நீறு பூத்த நெருப்பு
6. மானம் காத்த மாவீரன்
7. பிறை சூடிய பெருமான்
8. இதய கீதம்
9. இராம ராஜ்ஜியம்

**இதிகாச நாடகங்கள்**

10. கலி கொண்ட காவலன்
11. கொடைவள்ளல் குமணன் வரலாற்று நாடகங்கள்
12. சிங்களத்துச் சிங்காரி
13. பட்டத்தரசி
14. வெற்றித் திருமகன்

இக்கட்டுரை எழுதும் வரை நினைவுக்கு வராத இன்னும் நாடகங்கள்.

இவ்வாறு கலையுலகில் கொடிகட்டிப் பறந்தார். ஆரையம்பதி கலையுலகின் தாய் வீடு என்று உலகம் அறியவைத்து ஊருக்குப் பெருமை தந்த கலைக்குரிசில் நம் ஆரையூர் இளவல்.

இவ்வாறு பேரோடும், புகழோடும் விளங்கிய பல்லாளுமை கொண்ட பெருமகன் இன்றில்லை. பிறப்பெடுத்தால் இறப்பெடுப்பதும் வாழ்வியல் உண்மை. எப்படியவர் வாழ்ந்தார் என்ற, வாழ்ந்த காலப்பதிவு உலகம் உள்ளவரை அவரை வாழவைக்கும். ஆக, தமிழுக்கு தொண்டு செய்தோர் சாவதில்லை. செல்லத்தம்பி விதானையாருக்கு சாவில்லை.

'நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு"

**வே. தவராஜா**

செயலாளர் மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கம்
மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினர்,
அருணோதயம், ஆரையம்பதி - 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணைந்ததே கலைதீபம்....

வேதனையின் விளிம்பில் எம்மை
விம்மி அழ வைத்துவிட்டு
செல்லத்தம்பி ஐயா நீயும்
சென்று விட்டீர் எமைப்பிரிந்து

ஆரையம்பதி தந்த
அன்புருவே எங்கள் ஐயா
யாவரையும் கட்டிக் காக்கும்
பேருள்ளம் உந்தனுக்கு

கிராம சேவகராய்
அளப்பரிய செவை செய்தாய்
என்றும் நிலைத்திருக்கும்
உன் சேவை எம் மனதில்

நாடகத்துறையில் நீ
நாட்டம் அதிகம் காட்டி
நடித்தாய் பல நாடகங்கள்
அத்தனையும் அற்புதங்கள்

பொறுமைக்கு இலக்கணமாய்
பெருமையுடன் வாழ்ந்தீரே
சிறு பிள்ளை மனம் கொண்ட
செம்மலே மறைந்த தேனோ

விண்ணுயரப் புகழ்படைத்து
பேரோடு வாழ்ந்திட்டாலும்
வேண்டு மட்டும் காசு பணம்
உனைவந்து சேர்ந்திட்டாலும்
மண் எதிரில் தடம் பதித்த
மாந்தர்கள் எல்லோரும்
மறைந்திடுவார் உன் நாமம்
என்றும் மறையாதையா!
ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

**சோ.மகேந்திரலிங்ம்**
தவிசாளர் மண்முனை
பிரதேச சபை, ஆரையம்பதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரையூர் இளவல் – மறைந்து போகாததொரு நதி

**க**டந்த சில ஆண்டுகளாக ஆரையம்பதியின் கலை இலக்கியத் துறைக்கு பங்களித்த ஆளுமைகளின் இழப்புக்கள் தொடர்ந்து துக்கத்தையே ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. மண்ணின் அடையாளம் வேரோடு அறுந்து போகின்ற துயர் மேல் எழுந்து, உணர்வுத்தளம் ஏக்கம் கொள்கிறது. அன்புமணி, நவம், ரவிவர்மன், ஆரையூர் அமரன், சிவசுந்தரம் என நீள்கின்ற பட்டியலில் ஆரையூர் இளவல் புதிதாக இணைந்துள்ளார்.

ஆரையூர் இளவல் கலைச் செயற்பாட்டில் (நாடகம்) வித்தியாசமான போக்குடையவர். நாடகத்தின் இயங்கியலில் வேறுபட்ட தளத்தில் பயணித்தவர். தத்துருவத்தை, காட்சியமைப்பை, யதார்த்தத்தை பார்வையாளர்களுக்கு கொண்டு வந்து சேர்த்த இயற்பண்புவாத ஆளுமை. இதிகாசம், புராணங்கள், வரலாறுகளே பெரும்பாலும் இவருடைய கருப்பொருளாக இயங்கிவந்திருக்கின்றன.

வெகுஜன தளத்தில் அவரின் நாடகங்கள் பல ரசிகர்களை உருவாக்கியிருந்ததோடு **நீறு பூத்த நெருப்பு** போன்ற நாடகங்கள் **மேடை** ஏறியுள்ளன. இது நாடக வரலாற்றில் ஒரு சாதனை எனலாம். ஒரு நெறியாளன் நடிகனாகவும், பார்வையாளனாகவும் மாறும்போது அந்நாடகம் இன்னொரு தளத்திற்குப் பாய்வதை நாம் நாடக இயங்குதளத்தில் காண்கிறோம். அந்த இயங்கியலாளராக இளவல் இருந்திருக்கிறார்.

இவ்வாறான ஆளுமைக்கும் எனக்குமான உறவு எனது சிறு வயதிலிருந்தே உருவாகத்தொடங்கிவிட்டது. கட்டைக் காற்சட்டையும் வேற்மட்டையும், பந்துமென எங்கள் தெருக்களில் புழுதி கிளப்பித்திரிந்த காலங்களில் எனது அயல்வீட்டு ஒத்தாப்பில் (கடற்கரை மண் கொட்டிய மணல் திண்ணையில்) நடக்கும் கூத்து பயில் அரங்குகளில் ஆரையூர் இளவலும் சமுகம் கொடுப்பார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அது என்னுடைய பத்துவயதுக் காலம் என நினைக்கின்றேன். பெற்றோமக்ஸ் வெளிச்சம் ஒளி வெள்ளத்தைப் பாய்ச்ச, இருள் மெல்ல மெல்ல வெருண்டோடும். வண்டுகள் கொஞ்சம் கொஞ்சமாய் பெற்றோமக்ஸ்சை புடைசூழத் தொடங்கும் கணத்தில் நான் முன் அவையில் சப்பணங்கொட்டி அமர்ந்திருப்பேன். மூனாக்கானாவின் "பரிசாரி மகன்" கூத்தின் ஒத்திகை ஊரையே கூட்டும்.

"ஓ எல்லில் என்ட புள்ள சத்தியமாய் ஒரு டீயும் மூன்று சியும்... தையலும், ஹோம்சையன்சும் சாதாரணம்தான் மச்சான்..."

"அரிசரிக்கப் போனாள் என்றால் சோத்துக்குள்ள அரைகீப்புக் கல்லு வரும். கறியாக்கப்போனாள் என்றால் கண்ணில் மகாவலி ஊற்றெடுக்கும்..." - இந்தப் பாடல் வரிகள் காதினுள் ரீங்காரம் இடும் போதெல்லாம் சிரிப்பு வயிற்றைப் பியத்தெடுக்கும். ஆரையூர் இளவலும் குலுங்கிக் குலுங்கிச் சிரிப்பார். அவரின் தொந்தி மேலும் கீழும் நர்த்திக்கும். நானும் போட்டிக்குச் சிரிப்பேன்.

அப்போதுதான் "ஆரு இவரெ'ன பக்கத்திலிருந்த பள்ளிமாமாவிடம் வினாவினார். நம்ம எழுத்தாளர் தங்கராசாட மகன் என்றதும் "ஆ... அப்படியா? அதுதான் அந்தக் கரு..." என்று ஏதோ சொன்னார். அன்றிலிருந்து அவர் எனக்கு பழக்கமாகிவிட்டார். பின் இந்த நட்பு மெல்ல மெல்ல வளரத்தொடங்கியது.

நான் முளைக்க, அவர் மெல்ல மெல்ல பழுக்கத் தொடங்கினார். இந்த வயது போன காலத்திலும் தன் செயற்பாட்டை சற்றும் குறைக்காது செயல்வாதியாகவே இருந்தார். பல விடயங்கள் என்னுள் இறக்கை கட்டின... ஆரையம்பதிக்கும் காத்தான்குடிக்கும் இடையில் அப்பப்ப ஏற்படும் முறுகலின் போது சமாதானக் குழுதான் இரு ஊரையும் சமரசம் செய்து ஒற்றுமைப்படுத்தும். அப்படி 90க-ளில் உருவாகிய சமாதானக் குழுவின் முக்கிய செயற்பாட்டாளராக ஆரையூர் இளவலும் இருந்தார். பாணும் சம்பலும் மையோர்க்கிழங்கு அவியலும் அவர்களுடன் சுமக்கின்ற காலங்களின் நினைவுச் சொட்டுக்கள் என் கண் முன் எழுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதற்கும் பயப்படமாட்டார். அவரின் கம்பீரமான, மிடுக்கான நடையைப் பார்த்தால் மற்றவர்கள் பயந்து விடுவார்கள் .இதனால்தானோ என்னவோ விதானை வேலையும் அவருக்குப் பொருந்தியிருந்தது.

"சா... ஒரு தடவைதான். எதற்கும் பயப்படக்கூடாது." இது தான் அவரின் தாரகமந்திரம் "வவுன்றி" றோட்டில் விதானையார் நிற்கிறார் என்றால் பரமநயினார் கோவிலடி வட்டாரத்திற்கே துணிச்சல் பிறந்திடும். வெள்ளை வேட்டி வாலாமணியுடன் சமாதானத் தூதுவராக காட்சியளிப்பார். இந்த வேகமும், துணிவும், ஏனைய அங்கத்தவர்களின் ஒன்றிப்பும் இரு ஊர்களையும் அழிவுகளிலிருந்து மீட்டன. இந்தக் கைங்கரியங்களில் ஈடுபடும்போது ஏற்படும் அற்பங்களை காதில் வாங்கமாட்டார். "அக்குழுக்குழு" என இளசுகள் நையாண்டி விடும் ஒலங்களுக்கு செவிசாய்க்காது புன்னகை பூக்கும் அவரின் சாணக்கியம் பலர் அறியாதது.

2000ம் ஆண்டு "**MA**"கற்கை நெறிக்காக அவரை, அவர் வீட்டில் சந்தித்தேன். "ஆரையம்பதி பிரதேச நாடக மரபுகள்" எனும் தலைப்பில் நான் ஆய்வு செய்யவுள்ள சங்கதியையும் எனது ஆய்வு வழிப்படுத்துனராக பேராசிரியர் சி. மௌனகுரு நிய மிக்கப்பட்டுள்ளார் என்ற செய்தியையும் தெரியப் படுத்தியபோது மிகச் சந்தோசமடைந்தார். பின், தன்னிடமுள்ள தகவல்களையும் அண்புமணி மற்றும் ஏனைய நாடக நெறியாளர் களின் தகவல்களையும் தந்து உதவினார். அவரிடம் அடங்கிக்கிடந்த தகவல்களை தந்தபோது அவரின் முகத்தில் பேரொளி வீசியது.

"நம்மட ஊர் பற்றிய சகல விடயங்களும் எழுத்தில் வரவேண்டும் தம்பி... இன்று மிகச்சந்தோசமாக இருக்கிறது" என்றார். அவரின் ஆவணங்களைப் பார்க்கும் போது நான் மலைத்துப்போனது மாத்திரமல்ல..., "நவீன நாடகம்" எனும் சூறாவளி எமது மத்தியில் எத்தனை பாரம்பரிய நாடகங்களை வீழ்த்தி இல்லாது பண்ணியிருக்கிறது என்ற சிந்தனைச் சிதறல் ஒரு பக்கம் முளைக்கத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"இந்தா தம்பி இதைக் கொண்டுபோ" எனச் சில துண்டுப் பிரசுரங்களைத் தந்தார். அவரின் இணக்கம், என்னுடைய ஆய்வேட்டை முடித்தெடுக்க உதவியது.

அதுபோல் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள், திணைக்களம் நடத்துகின்ற கூத்துவிழாவிற்கு நடுவராக பணியாற்றி அந்நிகழ்வு சிறப்படைய வழியமைத்திருக்கிறார். 2016ம் ஆண்டு புதுக்குடியிருப்பில் நடைபெற்ற கூத்துவிழாவிற்கும், கூத்துப் போட்டிக்கும் நடுவராக சம்மதித்தும் தன் உடல் நிலை காரணமாக வரமுடியாத சூழல், அவருடைய வீட்டாரும் "இளவல்" செல்வதை விரும்பவில்லை. இருந்தும் எங்களின் திண்டாட்டத்தைப் புரிந்துகொண்டு "நடுவர்கள் திறனுடையவர்களாக இருந்தால் தான் நல்ல கூத்து எடுபடும்... சரி வாரன் தம்பி"யென அந்த தள்ளாத நிலையிலும் விடிய விடிய நடுவராகப் பணியாற்றிச்சென்றார். அவரின் செயல் மனதைக் கனக்க வைத்தது.

ஆரையம்பதிக் கிராமம் பல்துறையிலும் வளர்ச்சியடைந்த பட்டணம் என்று சொல்லலாம். கல்வி, கலை, இலக்கியம், ஆன்மீகம், விளையாட்டு என சகலதிலும் மட்டக்களப்பிற்கு முன்னுதாரணமாக பேசப்படும் இடம். அது போல் சினிமாத்துறையிலும் மட்டக்களப்புக்கு முன் உதாரணம். "நிர்மலா படத்தில் அமரர் தங்கவடிவேல் (முன்னாள் பராளுமன்ற உறுப்பினர்) கதாநாயகனாக நடித்துப் புகழ்பெற்ற பின்னர். ஆரையூர் இளவலின் வசனத்தில், 'மண்சுமந்த மகேசன்" என்ற முழுநீளத் திரைப்படம் மட்டக்களப்பின் முதல் வீடியோப்படமாக வெளிவந்தது. அப்போது நான் சிறியவன். கந்தசுவாமி கோவில் வெட்டையில் மினிபஸ்ஸில் ஒரு பட்டாளம் பேர் ஏறி... "சூட்டிங்காம்" என வேன் கிளம்பும். சனங்கள் புடைசூழ குழுவினரை மண்முனை வெட்டவெளிக்கு அனுப்பிவைப்பார்கள். இது பத்து நாட்களாக தொடர்ந்தது. ஜேர்மனியில் இருந்து வருகை தந்த ஆரையம்பதி சீனித்தம்பி செல்வநாயகத்தின் வீடியோ கமரா அந்தப் படத்தை இயக்குவதற்கு காரணமானது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவாக ஆரையூர் இளவல் எல்லாத் தளத்திலும் இயங்கியுள்ள மிகத்திறனான ஆளுமை. கவிதை, நாடகம், கூத்து, சினிமா, கலைச் செயற்பாட்டாளராக தன் ஊரிற்கு மாத்திரமின்றி அயல்கிராமங்கள் தோறும் செயற்பட்டிருக்கிறார்.

மட்டக்களப்பு மாவட்ட கலாசாரப் பேரவையில் மிகமுக்கியமான செயல்வீரனாகச் செயற்பட்டதோடு நில்லாது ஆரையம்பதி பிரதேச செயலக கலாசாரப் பேரவையிலும் அவரின் ஒத்துழைப்பும், ஆலோசனையும் கலை, இலக்கிய ஊட்டத்திற்கு வித்திட்டுள்ளன என்றால் அது மிகையாகாது.

சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர்
**த. மலர்ச்செல்வன்**
ஆரையம்பதி – 03






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரையூர் இளவல் - சமூக சேவையில்...

அமரர் செல்லத்தம்பி ஆரையூர் இளவல் பற்றி அனேகர் கலைபடைப்புக்களையும் கலை தொடர்பான விடயங்களையும்தான் குறிப்பிட்டு இருப்பார்கள். அவர் நாடகங்களை எழுதியும் நடித்தும் அரங்கேற்றியுமுள்ளார். இந்த விடயங்கள் யாவரும் அறிந்த, தெரிந்த விடயங்கள். நான் இந்த விடயங்களை விட்டு அவர் எமது ஊருக்குச் செய்த அரும்பெரும் சமூகப் பணிகளை இங்கு கூறலாமென நினைக்கின்றேன்.

அவர் எமது ஊருக்கு செய்த சேவைகள் அனேகம். எமது ஊரில் சூறாவளி அடித்த வேளை வீடுகளிலும் வீதிகளிலும் மரங்களும் மரக்கிளைகளும் வீழ்ந்து காடு போல் இருந்தது. இந்த சூறாவளி வீசி அடுத்த நாள் இவர் காலை வேளை பக்கத்திலுள்ள சுந்தரம் (ஸ்பீக்கர் சேவிஸ்) அவர்களைக் கூப்பிட்டு "உங்கள் ட்ரக்டரை கொண்டு வாருங்கள் நாம் இந்த வீதிகளை உடன் துப்புரவாக்கி போக்குவரத்தை உடன் மேற்கொள்ள வேண்டும்" என கூறினார்.

அதன் பிரகாரம் சுந்தரமும் முழு உற்சாகத்துடன் ட்ரக்டரை தந்தார். அப்போது அவரின் சகாவாக இருந்த த. யோகனும் (தற்போது அவர் அமெரிக்காவில் இருக்கிறார். இவரும் ஒரு முற்போக்கு சமூக சேவையாளன்) சுந்தரமும் நானும் அமரர் இளவலும் சேர்ந்து எமது ஊர் வீதியில் கிடந்த சகல மரம், தடி, கிளைகளையெல்லாம் வெட்டி மிகவும் நேரத்தியாக வெளியாக்கி, அன்று பிற்பகல் போக்குவரத்துக்கு வழி செய்யப்பட்டது. இது அவரின் திறமையான சமூகப் பணி எனலாம்.

அடுத்தபடியாக 1985, 86ம் ஆண்டுகளில் இயக்கப் பிரச்சினைகளின்போது ஊரில் பல பல முரண்பாடுகளும் சண்டை, சச்சரவுகளும் ஏற்படும். அப்போதெல்லாம் இவர் அந்த விடயங்களில் தலையிட்டு அவைகளையெல்லாம் சுமுகமாகத் தீர்த்து வைப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியான காலகட்டத்தில் காத்தான்குடியில் இடம்பெற்ற பள்ளிவாசல் சம்பவத்தினால் காத்தான்குடி - ஆரையம்பதிக்கிடையில் சொல்ல முடியாதளவுக்கு பயங்கரமான நிலை ஏற்பட்டு, ஆரையம்பதி மக்கள் சிலர் இனப்பிரச்சினை காரணமாக இடம் பெயரவும் செய்தார்கள். காத்தான்குடிக்குள் தமிழ் மக்கள் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதமடைந்தது. இப்படிப்பட்ட பயங்கர சூழலில் இவர் இப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவரும் பொருட்டு அப்போது அரசாங்க அதிபராக இருந்த திரு. அந்தோனிமுத்து அவர்களுடன் தொடர்புகொண்டு இந்த நிலைமையை சுமுக நிலைக்கு கொண்டுவரும் பொருட்டு இரண்டு ஊர்களுக்கும் - அதாவது காத்தான்குடி, ஆரையம்பதிக்கும் இரண்டு சமாதானக் குழுக்களை உருவாக்கி அந்த சமாதானக் குழுக்களின் கண்காணிப்பில் இனங்களுக்கிடையில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு சமாதானமான முறையில் தீர்வுகண்டு உரிய முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த சமாதானக் குழுவின் தலைவராக திரு. செல்லத்தம்பி அவர்களே இருந்தது மட்டுமன்றி, அவரின் இல்லமே இந்த சமாதானக் குழுவின் காரியாலயமாக செயற்பட்டது. இவரின் தலைமையின் கீழ் பின்வரும் உறுப்பினர்கள் செயற்பட்டார்கள்: திருவாளர்கள் அமரசிங்கம் ஆசிரியர், சுந்தரம் (சவுண்ட்சேவிஸ்), பரசுராமன் ஆசிரியர், கனகரெட்ணம் ஆசிரியர் சிவராசா (பு.ளு) ராசரெட்ணம் அதிபர் (2ம் குறிச்சி), அருளப்பா, விவேகானந்தன் (செல்வாநகர்) இவர்களுடன் நானும் இருந்து செயற்பட்டவன் என்ற ரீதியில் இந்த விடயத்தை இங்கு கூறுகின்றேன். இந்த சமாதானக் குழுவினால், இவரின் வேண்டுகோளுக்கு ஏற்ப ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் ஆரையம்பதியிலுள்ள ஒவ்வொரு ஆலயங்களிலும் ஊரின் சமாதானம் வேண்டி பூசையும் பிரார்த்தனையும் செய்யப்பட்டது. இரண்டு இனங்களுக்குமிடையே ஏற்பட்ட ஆள் கடத்தல், வாகனம் கடத்தல், ஆடு மாடு கடத்தல் இன்னும் பல பிரச்சினைகளையெல்லாம் இரு சமாதானக் குழுக்களினூடாக பேசி சுமுகமான முடிவு எடுக்கப்பட்டு தீர்வு காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகளிலெல்லாம் தலையிட்டு சுமுகமான முறையில் தீர்வு காண்பது போல் நமது ஊரிலும் ஆலயங்களின் ஒன்றியம் ஒன்றை உருவாக்க வேண்டுமென்று, இவரின் முயற்சியினால் எல்லா ஆலயங்களின் தலைவர்களையும் கூட்டி 21.05.1985ம் ஆண்டு ஆலயங்களின் ஒன்றியம் உருவாக்கப்பட்டது. இந்த ஒன்றியத்தின் போசகர்களாக திருவாளர்கள் ஏ. சுந்தரமூர்த்தி, க. இராசரெட்ணம், க.செல்லத்தம்பி (அமரர்) ஆகியோரும், தலைவராக திரு. சி. வாமதேவனும் அவர்களும் இத்துடன் நிர்வாக சபையில் சகல ஆலயங்களின் தலைவர், செயலாளர்களும் செயல்பட்டனர்.

இந்த ஆலயங்களின் ஒன்றியத்தின் மூலம் இராணுவம் தொடர்பான விடயங்களை இராணுவ முகாம் அதிகாரியுடனும், முஸ்லீம் சமூகம் சம்பந்தமான பிரச்சினைகளை முஸ்லீம் பள்ளிவாசல்கள் சம்மேளத்துடனும் தொடர்பு கொண்டு பல பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்டன. இந்த விடயத்தை செய்ய வழிவகுத்துக் கொடுத்ததும் இவரின் ஓர் உன்னத சேவையெனக் கூறலாம்.

இப்படியாக பலவிதமான சமூகப் பணிகளை அடுக்கிக் கொண்டே போகலாம். குறிப்பாக சொல்வதென்றால் அவரது கலைப் பணிக்கு அவரது சமூகப்பணி எந்த விதத்திலும் குறைந்தது இல்லை எனக் கூறலாம். இப்படிப்பட்ட அன்னாரது இழப்பு ஈடுசெய்ய முடியாததொன்றுதான். என்ன செய்வது மரணத்திற்கு மருந்து இல்லை.

அன்னாரது ஆத்மா சாந்தி பெறட்டும்.

ஓம் சாந்தி!

கலாபூஷணம்
**ஐ. மகேசானந்தம்**
ஆரையம்பதி – 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்குப் பெருமை...

தவபதியின் ஆணிவேர் அறுந்துவிட்டது என்று கேள்விப்பட்டதும் அதிர்ச்சியும் ஆறாத துயரும் அடைந்தேன். எனக்கு இன்றும் பசுமரத்தாணி போல் நல்ல ஞாபகம் இருக்கின்றது - தங்களின் மாப்பிள்ளைத் தோழனாக 50 வருடங்களுக்கு முன் தங்களை "தவபதி"க்கு அழைத்து வந்தது.

தங்களின் கவர்ச்சிகரமான, அருள்புரியும் முகம் எவரையும் கவர்ந்திழுக்கும். கிராம சேவகராக மட்டும் அல்லாது ஒரு தலை சிறந்த நீதவானாக, பிரச்சினைக்குத் தீர்வு காணும் விதம் தனித்தன்மை வாய்ந்தது. உங்கள் சேவைக்காலத்தில் எத்தனையோ குடும்பப் பிரச்சினைகள் தங்கள் முன் வைக்கப்பட்டபோது, நீங்கள் மிகவும் சாதுரியமாக, இரு தரப்பிற்கும் நியாயமாக தீர்ப்பு வழங்கி பிரச்சினையை அத்துடன் முடித்து அவர்களை திருப்தியுடன் வீட்டுக்கு அனுப்பி வைப்பீர்கள்.

தங்களின் சேவை மனப்பான்மை அத்துடன் நில்லாது, தமிழுக்கும் தமிழ் கலாச்சாரத்திற்கும் நீங்கள் செய்த தொண்டு அளப்பரியது. தங்களின் பொறுமை, கடமை உணர்ச்சி, சேவை மனப்பான்மை, நடுநிலை வகிக்கும் திறன் போன்ற நற்பண்புகள் உங்களுடன் கூடப்பிறந்தவை.

எங்கள் குடும்பத்தில் அங்கத்தவராக உங்களைப் பெற்றது எமக்குப் பெருமை. நீங்கள் வாழும் காலத்தில் நாங்களும் வாழ்ந்தோம் என்பதில் எங்களுக்கு அதைவிடப் பெருமை.

கடைசிக் காலத்தில் தங்களை வந்து பார்க்க முடியாமல் போனதை நினைத்து மிகவும் கவலை கொள்கின்றேன். தங்களின் ஆத்மா சாந்தியடைய என்றும் என் பிரார்த்தனைகள் அத்தான்.

மைத்துனன்

**இரா. மோகனச்சந்திரன்**

(அவுஸ்திரேலியா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு அம்மாச்சி பற்றிய நினைவுகள்

நீங்கள் எங்கள் அம்மாவின் பாசமான உடன்பிறப்பு. நீங்கள் அன்போடும் பாசத்தோடும் பரிவோடும் அரவணைத்து வளர்த்து ஆளாக்கிய பிள்ளைகள் நாம். பாடசாலை செல்லும் காலங்களில் தேவையான ஆதரவை வழங்கி நல்ல கல்வி பெற நாட்டமுடன் செயற்பட்டீர்கள். எங்கள் ஒவ்வொருவரின் வாழ்வும் சிறக்க இன்னோரன்ன உதவிகளையும் வழிகாட்டல்களையும் செய்தீர்கள்.

அம்மாவுடனான தங்கள் இளமைக் காலங்களில் ஏழ்மையின் காரணத்தால் அம்மாவுடன் தாங்களும் சேர்ந்து கஷ்டப்பட்டு உழைத்து வாழ்ந்ததாக அம்மா சொல்லக் கேட்டிருக்கின்றோம். அப்பாவுக்கு ஏற்ற மைத்துனனாக இருந்த தாங்கள், அப்பாவுடன் ஒத்துழைத்து. எங்கள் குடும்பத்தை வழிப்படுத்த ஆவன செய்தீர்கள். குடும்பத்தில் குழப்படி செய்தவர்களை பொறுப்புடன் தண்டித்து. அறிவுரை கூறி திருந்தியவர்களாக வளர ஆக்கமுடன் உதவினீர்கள்.

தங்கள் வாலிபப் பருவத்தில் அம்பாறை கல்லோயா வோட்டில் வேலைக்குச் சென்று லீவில் வரும்போது எங்களுக்கு விளையாட்டுப் பொருட்கள், தின்பண்டங்கள் கொண்டு வந்து தந்து எங்களை மகிழ்விப்பீர்கள். இளமைத் தோற்றத்தில் அழகாகவும் மிடுக்காகவும் திகழ்ந்த தாங்கள் சித்திரவேல், தர்மலிங்கம் போன்ற நல்ல நண்பர்களையும் குடும்ப நண்பர்களாக பெற்றிருந்தீர்கள்.

எங்கள் ஒவ்வொருவரது நல்ல காரியங்களிலும் நிகழ்வுகளிலும் பங்கு கொண்டு அன்பையும் ஆதரவையும் நல்கினீர்கள். அதே போல் எங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட துக்க நிகழ்வுகளிலும் பங்கு கொண்டு எங்கள் துயரங்களில் பங்கேற்று ஆறுதல் அளித்தீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கள் திருமணம் செய்ததன் பின்னரான காலங்களிலும் உங்கள் குடும்பத்தவர்களும் நாங்களும் மிகவும் சிறந்த உறவைப் பேணி வருகின்றமைக்கு ஆதாரமாக நின்றிருந்தீர்கள். எங்கள் எல்லோரதும் குடும்பத் தலைவனாய், ஒளி வீசும் விளக்காய் இருந்து வழிகாட்டிச் சென்றீர்கள். எங்கள் வாழ்வுடன் இரண்டறக் கலந்த உங்கள் வாழ்வும் அது விட்டுச் சென்ற நினைவுகளும் என்றும் பசுமையானவை - அழியாதவை.

நீங்கள் கிராம சேவையாளர் பதவி பெற்று ஊருக்கும் மக்களுக்கும் நன்றாக சேவை செய்தீர்கள். நேரம் காலம் பார்க்காது தேவையறிந்து பணியாற்றினீர்கள். சமூகத்தின் உயர்வுக்காய் சமூக அக்கறையுடன் தொழிலாற்றினீர்கள். சமூக மக்களுடனான உங்கள் உறவு இணையில்லாதது.

தாங்கள் பல்வேறு திறமைகளை, ஆளுமையைக் கொண்டிருந்தீர்கள். பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டு தங்கள் திறமைகளை வெளிக்காட்டினீர்கள். தமிழ்க் கலை, இலக்கியப் பரப்பில் ஆழ நுழைந்து ஆழமான படைப்புக்களை ஆக்கீனீர்கள். நாடகம், சிறுகதை, கட்டுரைகள், சமய, சமூக சொற்பொழிவுகள் என கலைத்துறையின் எல்லாப் பரப்பிலும் காலூன்றி உங்கள் ஆளுமையை வெளிப்படுத்தினீர்கள். உங்கள் ஆக்கங்கள், முயற்சிகள் முறையாக ஆய்வு செய்யப்பட்டு வெளிக்கொண்டு வரப்படும் பட்சத்தில் நீங்கள் குன்றின் மேல் தீபமாக விளங்குவீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்திற்காய், மக்களுக்காய், ஊருக்காய், சமூகத்துக்காய் ஆற்றிய உங்கள் அயராத பணிகளால் நீங்கள் உயர்ந்து நிற்கிறீர்கள். உங்கள் பெருமைகளால் நாமும் பெருமையடைகின்றோம். உங்களின் இறை பக்தி, உன்னதமான மக்கள் சேவை, தளராத கலை இலக்கிய தொண்டுகளால் என்றென்றும் உங்கள் பெயர் மாறாத புகழுடன் நிலைத்து நிற்கும்.

தங்கள் ஆத்மா சாந்தி பெற வேண்டி எங்கள் கண்ணீர்ப் பூக்களை சமர்ப்பிக்கின்றோம்.

மருமக்கள் குடும்பத்தினர்

**அ. தருமகுணசேகரம்**

**அ. மகேந்திரராஜா**

**சாரதாதேவி பரமானந்தம்**

**மா. செல்வநாயகம்**


**பாக்கியம் சந்திரசேகரம்**

**அ. இராஜேந்திரன்**

**அ. பூரணகுமார்**

**அ. அரிச்சந்திரகுமார்**

**சுசிலாதேவி பிரகாஷ்**



அன்பு
எங்கிருக்கிறதோ
அங்கே கடவுள்
இருக்கிறார்.
~ மகாத்மா காந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள அப்பா ஆரையூர் இளவல்

கந்தப்பன் குஞ்சுப்பிள்ளை தம்பதிகளுக்கு மூன்றாவது மகனாக பிறந்தவர் என் அப்பா செல்லத்தம்பி. உயரமானவர் வெண்மை நிறம் அறிவும் அழகும் ஒருங்கே அமைந்தவர் என் அப்பா. தனது பள்ளிப் பராயத்தில் விபுலானந்த அடிகளாரின் ஆசீர்வாதம் பெற்றவர் அவர். பள்ளிக்கூடத்தில் படிக்கும் காலங்களில் நாடகத்தில் சீதை வேடமேற்று நடித்திருக்கிறார். அம்பாறை இங்கினியாகால நீர்ப்பாசன திட்டத்தில் வேலை செய்து பின்பு கிராமசேவகராக வேலை செய்தார். ஒன்பது பிள்ளைகளுக்கு தந்தையாகிய என் அப்பா எங்களை படிப்பித்து வளர்த்து ஆளாக்கினார்.

முன்பு கல்லடி தொடக்கம் மஞ்சந்தொடுவாய் வரை கிராம சேவகராக பணியாற்றியிருக்கிறார். பல நாடகங்களை தயாரித்து நெறிப்படுத்தி மேடையேற்றியிருக்கிறார். அத்துடன் கிராமியக் கலைகளான கூத்து வடமோடி தென்மோடி, கும்மி, கரகம் இவற்றுக்கு தனது பங்களிப்பை செய்திருக்கிறார். எழுத்துத்துறையிலும் ஈடுபாடு கொண்ட என் அப்பா, நீறு பூத்த நெருப்பு, விபுலாநந்தர் வாழ்கின்றார் எனும் இரண்டு புத்தகங்களை வெளியிட்டிருக்கின்றார். இதில் "நீறு பூத்த நெருப்பு" அப்பாவின் தயாரிப்பில் பல முறை மேடையேற்றப்பட்ட நாடகமாகும். "விபுலாநந்தர் வாழ்கின்றார்" எனும் பாடல் நூல் ஒலி நாடாவாகவும் வெளிவந்தது.

தனது எழுத்துப் படைப்பு, ஆக்கங்கள் அனைத்தையும் "ஆரையூர் இளவல்" என்ற புனைபெயரில் படைத்தார். தமிழ் - முஸ்லிம் கலவரத்தின்போது சமாதானக் குழுவில் இருந்து இன நல்லிணக்கத்திற்கு தனது பங்களிப்பை திறம்படச் செய்தார். முன்னொரு காலத்தில் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் இருக்கும் கலையரங்கில் அப்பாவின் நாடகம் மேடையேற்றப்படும் பொழுது அதைப் பார்ப்பதற்கு என்னையும் அழைத்துக் கொண்டு போனார். "மண்சுமந்த மகேசன்" எனும் நாடகத்தை தயாரித்து அதை ஒளிப்படமாக்கினார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆரையம்பதி கந்தசுவாமி கோயில் உற்சவத்தின்போது மண்சுமந்த மகேசன் எனும் புராண நாடகத்தை ஒளிப்பதிவேற்றி மக்களுக்குப் போட்டுக் காண்பித்தார். அந்தக் காலத்தில் கிழக்கிலங்கையில் முதலாவது வெளிவந்த வெளிப்புற படப்பிடிப்பு இந்த புராண நாடகமாகத்தான் இருக்கும். வருடா வருடம் நடைபெறும் தமிழ்த்தினப் போட்டிக்கு நடுவராக திருகோணமலைக்குச் சென்றுவருவார் என் அப்பா. பணி நிமித்தம் கொழும்புக்கு சென்று வரும் பொழுது நிறைய பழங்கள், இனிப்புகள் எங்களுக்கு வாங்கிவருவார்.

அது மட்டுமல்லாமல் காத்தான்குடி மார்க்கெட் போகும்போது என்னையும் சில வேளைகளில் கூட்டிச் செல்வார் எனது சிறுபராயத்தில் மரமுந்திரிகை சீசன் வரும் பொழுது நானும் அப்பாவும் மஞ்சந்தொடுவாயில் உள்ள எங்கள் வளவுக்கு போவோம். அங்கு வளவை சுத்தம் செய்து முந்திரிகைப்பழம், விதைகள் கொண்டு வருவோம் வீட்டிற்கு. என் அப்பா அவருடைய ஓய்வூதியக் காலத்தில் ஆரையம்பதியில் உள்ள வளவில் தென்னம்பிள்ளை வைத்து பராமரித்து வளவு வேலைகளில் ஈடுபட்டுவந்தார்.

மட்டக்களப்பு மாநகருக்கு சென்று வரும்பொழுது புத்தகங்கள், சஞ்சிகைகள், வாரநாளிதழ் போன்றவைகள் வாங்கி வருவார். இதன் மூலம் எங்கள் வாசிப்புப் பழக்கம் மேம்பட்டது.

அப்பாவின் தாயாரான குஞ்சுப பிள்ளையை இறுதிக்காலங்களில் தன் வீட்டில் வைத்து பராமரித்தார். எங்கள் வீட்டில் உள்ள ஒன்பது பிள்ளைகளுக்குள் முதல் அரசாங்க வேலை பார்த்த பிள்ளை நான்தான். அதற்குக் காரணம் என் அப்பா. அவர்தான் எனக்கு அரச வேலை எடுத்து தந்தார் பின்பு நான் வெளிநாடு போகப்போறேன் என்றதும் ஜேர்மனியில் வசித்த என் அண்ணாவிடம் சொல்லி அதற்கான வேலைகளில் ஈடுபட்டார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பின்பு என்னுடன் கொழும்புக்கு வந்து நான் வெளிநாடு போவதற்கான ஆயத்தங்களை செய்து தந்து என்னை வெளிநாடு அனுப்பிவைத்தார்.

என் அப்பாவைப் பற்றி எழுத நிறைய விடயங்கள் உண்டு. சிலவற்றை மட்டுமே இங்கு குறிப்பிட முடிந்தது. கண்களில் நீர் பனிக்க இதயம் இறுகிய நிலையில், அவர் வாழ்ந்த காலத்தில் நானும் வாழ்ந்தேன் எனும் ஆற்றுப்படுத்தலுடனும் என்றும் என் இதயத்தில் அவர் நீங்கா நினைவுகளுடனும் வாழ்ந்து வருகிறார் எனும் ஆறுதலுடனும்,

மகன்
**செழியன்**
(ஜேர்மனி)



**எவன் ஒருவன் தனக்குத்தானே மனக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்கிறானோ, அவனே சுதந்திர மனிதனாவான்..**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எங்கள் அம்மாச்சி...

நீர்வளமும் நிலவளமும் நிறைந்து வளர் பதியாம்
சீர் பெருகும் ஆரையூரிற் சிறப்புடனே வந்துதித்து - ஊர்மகிழ
மலையென நின்ற மகான் ஆரையூர் இளவல் என்றும்
கலைவளங் கண்டான் காண்

விடியல் எண்ணி நாங்கள்
விருப்புடனிருந்த வேளை
இடியென வந்த தையா
இமயம் சரிந்த சேதி
முடிவிலா சோகக் கடலுள்
மூழ்கடித்தே உமைக்
கடிதினில் வந்த காலன்
கவர்ந்துதான் சென்ற தேனோ?

அன்பிலும் பண்பிலும் எம்மை
ஆட்கொண்டு ஆதரித்தீர்
இன்புறு கருணையினால்
ஈட்டினீர் பெருமைதன்னை
துன்பங்கள் தொடர்ந்திடாமல்
தூயதாம் தொண்டு செய்தீர்
என்றென்றும் உந்தன் ஆவி
இறையடியில் அமைதி காண்க

நீறுபூத்த நெருப்பாக
நெஞ்சிற் கனன்ற தமிழ்
வீறு கொண் டெழுந்து
வென்றதே உலகனைத்தும்
நூறு நூறு தலைமுறைகள்
நின்னரும் புகழ்பாடும்
ஆறுமோ உன்னிழப்பு
அம்மாச்சி எங்கு சென்றீர்...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகங்களென்ன நற்றமிழ்க் கவிதையென்ன
மேடைப்பேச்சென்ன மெய்சிலிர்க்கும் கூத்தென்ன
தேடரிய செல்வமாய் திகட்டாத தெள்ளமுதாய்
பாடலாய் பனுவலாய் பலவாய் தமிழ்த் தொண்டு
கூடுமோ இனி உந்தன் குரல்தான் கேட்பதற்கு
குமுறுதே உள்ளம் கூப்பியகரங்கொண்டு
கூடுதான் பிரிந்து குயிலொன்று பறந்ததுவோ
குறுகி முடிந்ததே கவினுறு பாடலொன்று

கணீரென்ற குரலும் கம்பீர நடையும்
கானல் நீரான தென்ன
பணிவான பாங்கு பதறாத நெஞ்சம்
பனியாகிப் போன தென்ன
கனிவான பார்வை காந்தச் சிரிப்பு
கனவான கோலமென்ன
இனிதான பேச்சு இதமான வார்த்தை
இனி நாங்கள் கேட்பதெங்கே

வையத்தில் நிறைவாக வாழ்ந்த தலைவன்
வரலாறு படைத்திட்ட வீர மறவன்
பொய்யுற்ற பிறவியுடல் போதுமென்றோ
பிரிவென்னும் துயர்தந்து சென்றுவிட்டார்
தெய்வத்தின் திருப்பாதம் சேர்ந்துவிட்டார்
தெரியாமல் நாமிங்கு மயங்குகின்றோம்
கையற்ற மாந்தரையும் காப்பான் கண்ணன்
கலங்காமல் அவனிடத்தில் வேண்டிநின்றோம்.

தங்கை மகன்
**நா. அருட்செல்வன்**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அன்பான எங்கள் மாமா

மண்ணின் மைந்தனாய் மனதில் மாணிக்கமாய்
மட்டுநகர் பெற்றெடுத்த மண்சுமந்த மகேசனாய்
மண்முனைப்பற்று பிரதேசத்தின் மாண்புறு ஆரையூரில்
பங்குனித் திங்கள் இருபத்தேழில் எழிலாய்ப் பிறந்தார்
எங்கள் மாமா

ஏட்டுக் கல்வி அனைத்தும் கற்று
எழுதுவினைஞர் பதவியும் பெற்று
எழுத்துத் துறையில் ஆர்வமும் கொண்டு
ஏற்றமே பெற்றார் எங்கள் மாமா

பாட்டு கவிதை பேச்சு நாடகம்
கதைகள் யாவும் கரத்தில் கலையாக
ஏந்திழை தவமணி திருக்கரம் பிடித்து
இல்லறம் புகுந்தார் எங்கள் மாமா

பெற்றிட்ட சேவையை பொதுமக்கள் நலன்கொண்டு
கிராமத்தின் சேவகராய் பணியினைத்தான் தொடர்ந்து
மாறனொடு செல்வி என மழலைகள் தான் பெற்று
மனநிறைவாய் மகிழ்வோடு வாழ்ந்துவந்தார் எங்கள் மாமா

உற்றமும் சுற்றமும் பாரும் போற்ற - ஓய்வு
ஊழியர் நலன்புரித் தலைவனாய்த் தானும்
பணிகள் பத்தினையும் பாங்காய்ப் புரிந்தே
தணியாத புகழுடன் தடமது பதித்தார்

சீ" யென்று சினந்ததில்லை ஒரு
தீச் சொல்லும் பகன்றதில்லை
பெற்றிட்டமருமகன்மார் எமைத்தானே
மகன்மாராய்ப்
பேணிப் பார்த்தார் எங்கள் மாமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தனது பிறந்தநாளில் மைத்துனர் அன்புமணியுடன்



டாக்டர் முருகப்பன் (சம்பந்தி), அன்புமணி ஆகியோருடன்



மாப்பிள்ளைமாருடன்






பொது நிகழ்வுகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றமேதும் சொல்லொணா குலவிளக்குகள் தமை தந்தார்
குடும்பமாய் நாம் வாழ குதூகலமாய் அவர் வாழ்ந்தார்
கணக்கிட்ட காலனவன் கணக்குகளைத்தான் முடிக்க
கருவியாய் கான்சர்நோயை கடுகதியாய் தந்துவிட்டான்

வந்ததே ஒரு வாரம் வருத்தியே சென்றதையா
வாடினோம் நிலைகண்டு வருந்தினோம் உம் துயர் கண்டு
சிரித்திட்டாய் நீயும் சிறிதேனும் கலங்கவில்லை
சிரித்த முகம் மாறவில்லை சிந்தனையும் தளரவில்லை

கலங்குகின்றோம் நாம் மாமா கண்ணெதிரில் கரைந்துவிட்டீர்
கதறுகின்றோம் நாம் கருணைதான் காட்டாயோ
புலம்புகின்றோம் நாம் மாமா புத்துயிர்பெற்று வாராயோ
ஏங்குகின்றோம் நாம் மாமா ஏக்கம் தான் தணிப்பாயோ

பாயினில் கிடக்கவில்லை பத்தியம் காக்கவில்லை
நோயென்று நொடியென்று நொந்து நாம் காணவில்லை
சட்டென்று வந்திட்ட சம்பவமாய் விதி செய்த
சதிதான் என்னவென்று அறிந்தாரோ எம் மாமா

மறக்கவில்லை உம்பேச்சு மறக்கவில்லை உம் சிரிப்பு
மறக்கவில்லை உம் பாசம் மறக்கவில்லை உம் நினைப்பு
எத்தனை ஆண்டுகள்தான் எட்டியே போனாலும்
ஒட்டியே நிற்குமையா கட்டிவைத்த சொந்தம் இது.

மண்ணுலகை விட்டு விண்ணுலகு சென்றாலும்
இறைபதமே எய்திட இறைஞ்சியே நிற்கின்றோம்.

அன்பு மருமகன்மார்

**துஷன், ஞானகுமார்,**
**சாயிகரன், கிஷோக்குமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புத் தீபம் அணைந்தது!

எனது தங்கை பூமாவின் கணவர் பூ, டிப்பர் வாகனத்தில் அடிபட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். காலில் சற்றுப் பெரியகாயம் என்றார்கள். அந்தச் செய்தி மனதைப் போட்டு அரித்துக்கொண்டிருந்தது.

அப்படியிருக்கையில் மட்டக்களப்பு வீட்டிலிருந்து ஒரு செய்தி: "அப்பா நேற்று கட்டிலிலிருந்து எழும்பும்போது விழுந்து விட்டார். பூவைப் பற்றி யோசித்தாரோ தெரியவில்லை. இப்போது நடக்க முடியாமல் கஷ்டப்படுகிறார். பிடித்துக்கொண்டுதான் நேற்று நடந்தோம். இன்றைக்கு எழும்பி இருக்கவும் கஷ்டப்படுகிறார்..."

அதிர்ச்சியாயிருந்தது. மறுநாள் காலை முருங்கனிலிருந்து மட்டக்களப்பு நோக்கிய எனது பயணம் எனது கடைசி மகளுடன் ஆரம்பமானது. மனம் முழுவதும் அப்பாநினைவாகவே இருந்தது.

நான் எப்போது வீட்டிற்குச் சென்றாலும் வாயிற் கதவடியில் சிரித்த முகத்துடன் நிற்பார். "வாங்க... வாங்க..."- அன்பாக இரண்டு கைகளையும் நீட்டி அழைப்பார்.

பேரப் பிள்ளைகள் தலையில் ஆசையாகத் தடவுவார். இரவில் தானே வீட்டைப் பெருக்கி, படுப்பதற்கான படுக்கை விரிப்புக்களை ஒழுங்குபடுத்தி, "மகள் படுங்க... நேரமாகுது, நாளைக்குக் கதைக்கலாம்..." என என்னையும், பிள்ளைகளையும் நேரத்திற்கு நித்திரைக்கு செல்ல வைப்பார். அலுப்பில் சாப்பிடாமல் படுத்தால் விடமாட்டார். "ராதா... சாப்பிட்டுட்டுப் படு மகள். பிள்ளைகளுக்கும் சாப்பாட்டைக் கொடுங்க" என்பார். எனது கணவர் துஷனுடன் சென்றால், "துஷன் சாப்பிட்டாரா? சாப்பாட்டைக் கொடுங்க" என்பார். "இல்ல அப்பா நீங்க சாப்பிடுங்க. அவர் நேரம் செல்லச் சாப்பிடுறாராம்" என்றால் கேட்கவே மாட்டார். இறுதியாகத்தான் சாப்பிடுவார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள், "அம்மப்பா ரொபி... அம்மப்பா ரொபி..." எனப் பின்னால் திரிவார்கள். "ஓம் தாறேன்... தாறேன்..." என என்ன வேலையாக இருந்தாலும் அப்படியே போட்டுவிட்டு எழுந்து சென்று எடுத்துக் கொடுப்பார்.

"அப்பா பனடோல் தாங்க... விக்ஸ் தாங்க..." என என்ன மருந்துப் பொருள் வேண்டுமென்றாலும் அப்பாவிடம்தான் கேட்போம். மருந்துகள் எல்லாம் பெட்டியில் போட்டு ஒழுங்காக வைத்திருந்தார். "அப்பா... நுளம்பு கடிக்குது." "ஓம் மகள்... இந்தா வைக்கிறன்" என்று நுளம்புத் திரியுடன் வருவார். திருமணம் முடித்ததும் கதை எழுவதற்கு முற்றுப்புள்ளி வைத்த என்னை தொடர்ந்து எழுதும்படி ஊக்கப்படுத்தினார்.

"என்ன மகள் புரமோசன் வரலையா?" என என்னை விட எனது வேலையிலும், தனிநலனிலும் கூடிய அக்கறை காட்டினார். எனதோ, எனது பிள்ளைகளினதோ ஒரு சான்றிதழ் அல்லது ஆவணங்கள் தேவைப்பட்டால் அப்பாவிடம் தான் கேட்பது. அனைத்தையும் பிரதிகள் எடுத்துக் கோவையிட்டுப் பத்திரமாக வைத்திருந்தார்.

பல நாடகங்கள், கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள் என எல்லா இலக்கியங்களிலும் கைதேர்ந்தவராக விளங்கினார். "ஆரையூர் இளவல்" என்ற புனைபெயரில் இவற்றையெல்லாம் எழுதினார். "கலாபூஷணம்" போன்ற பல உயரிய விருதுகள் பெற்றார். ஓய்வு பெற்ற கிராம அலுவலராக, ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத் தலைவராக ஓடி ஓடிப் பணியாற்றினார். இரவு பகலாக இவரது எழுத்துப் பணி தொடரும். கண்ணாடி இன்றியே இவரது எழுத்துப்பணி பயணித்தது.

இப்படியாக மனம் முழுவதும் அப்பா நினைவுகளுடன் ஒருவாறு மட்டக்களப்பை வந்தடைந்தேன்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஓட்டோ பிடித்து வீட்டிற்குச் சென்றேன். ஏனோ தெரியவில்லை, மனம் முழுவதும் "நான் செல்லும்போது அப்பா வழமைபோல் வாயிற் கதவடியில் நிற்க வேண்டும்" என ஆதங்கப்பட்டுக் கொண்டே வந்தது.

ஓட்டோவிலிருந்து இறங்கிய எனது கண்கள் வாயிற் கதவடியை நோக்கின. கண்களில் களிப்பைத் தரும் என் அன்புத் தெய்வத்தில் உருவை அங்கு காணவில்லை. வெற்றிடமே என்னை வரவேற்றது. பதற்றம் தொற்றிக்கொள்ள வீட்டிற்குள் ஓடினேன். கட்டிலில் கண்களை மூடிய வண்ணம் என் அப்பா படுத்திருந்தார்.

"அப்பா... அப்பா... ராதா வந்திருக்கிறேன்." கண்களை மறைத்த கண்ணீருக்குத் திரை போட்டு அப்பாவை அழைத்தேன். அப்பா கண்களை மெதுவாகத் திறந்தார். சிறு புன்னகை மலர்ந்தது.

எனது தம்பி திரையனின் உதவியுடன் அப்பாவை இருக்கச் செய்தனர். நான் வாங்கிவந்த "யோக்கட்டை" ஊட்டிவிடவே, அப்பா அழகாக உண்டார்.

"போதும் என்னைப் படுக்க வையுங்கள்" என முணுமுணுத்தார். "இல்லப்பா எல்லாவற்றையும் சாப்பிடுங்க" - அப்பா முழுவதையும் உண்டார்.

தம்பி ரதீஸ் (மருத்துவர்) ஆலோசனைப்படி வைத்தியசாலைக்கு கூட்டிப்போக தீர்மானித்தோம். கருத்தரங்குக்காக கொழும்பு சென்றிருந்த தங்கை சித்ரா (மருத்துவர்) கொழும்பிலிருந்து மறுநாள் வந்ததும் அன்று பிற்பகல் அயல்வீடும் உறவினருமான சிவராசா, ஆதித்தியன், சரவணன் உதவியுடன் தம்பி சுரேசின் காரில் அப்பா ஏற்றப்பட்டார். நானும் மாமா மகள் சஞ்சுவும் கூடச்சென்று ஏறி வைத்தியசாலையில் அப்பாவை அனுமதித்தோம். தனது மகள் சித்ரா பணிபுரியும் விடுதி இலக்கம் 16 சிகிச்சைப் பிரிவில் அப்பா சேர்க்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அப்பாவிற்குரிய மருத்துவப் பரிசோதனைகள் அனைத்தும் செய்யப்பட்டன. எல்லாப் பெறுபேறுகளும் "பிரச்சினையில்லை" என்னும் திருப்திகரமாக முடிவையே கூறின. இறுதியாக வைத்திய நிபுணர் அகிலன் அவர்களின் சிபார்சுடன் "ஸ்கேன்" பண்ணப்பட்டது. அதில் அப்பாவின் ஈரல் வீங்கியிருப்பதாகவும் அதில் பெரிய கட்டிகள் காணப்படுவதாகவும் கூறப்பட்டது. அது தொடர்பாக, முழுமையான "ஸ்கேன்" செய்தபின்தான் சரியான பிரச்சினை கண்டுபிடிக்கப்படும் எனக் கூறினர். மறுநாள் அதற்குரிய ஆயத்தங்கள் அனைத்தும் மள மள என நடைபெற்றன. அப்பா "முழுமையாக ஸ்கேன்" செய்யப்பட்டார். இறுதியாக அப்பாவிற்கு வந்திருப்பது "ஈரல் புற்றுநோய்" என்னும் பெரியதொரு குண்டை எம் தலைமேல் போட்டனர்.

தங்கை மூலம் கிடைத்த இவ் அதிர்ச்சித் தகவலால் நிலைகுலைந்து போனேன் நான். அழுவதைத் தவிர என்னால் எனது தந்தைக்கு ஒன்றுமே செய்ய முடியவில்லை. வைத்திய நிபுணர் அகிலன் அவர்கள் என்னையும், தங்கையையும் அழைத்து உரையாடினார். தன்னால் இயன்ற அத்தனை உதவிகளும் புரிந்தார். எங்களது தந்தையை பார்ப்பதற்கு அதிகாலையில் வைத்தியசாலைக்குச் செல்லும் எங்களுடன், மழை, குளிர் பார்க்காது கடவுள் தந்த துணையாக சஞ்சுவும் உடன் வருவார். அதிகாலை தொடங்கி அந்தி சாயும் வரை எங்களுடன் சேர்ந்து அப்பாவை அன்பாகக் கவனித்தார். இவ்வேளையில் பூவின் நண்பன் "றோதிஸ்" என்பவரும், எந்தவித எதிர்பார்ப்புகளுமின்றி அப்பாவை மிக அன்புடன் கவனித்துக்கொண்டார்.

இவ்வேளையில் லண்டனில் இருந்து எனது மூத்த அண்ணா மாறன் அப்பாவைப் பார்ப்பதற்கு வந்தார்.

"இப்போது தான் ஆறுதலாக இருக்கிறது." எனது தந்தை அண்ணாவைப் பார்த்துக் கூறிய வார்த்தைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது மாமா ரவி அவர்கள் அப்பாவைப் பார்ப்பதற்கு வந்தார். "எனது கதை முடியப்போகுது." - எனது தெய்வம் மாமாவைப் பார்த்துக் கூறிய வார்த்தைகள்.

சித்ராவும், உடன் பணிபுரியும் வைத்தியரும் அப்பாவின் பிரச்சினை தொடர்பாக கதைத்துவிட்டு, அப்பா கட்டிலருகில் வந்த சித்ராவிடம் அப்பா கூறிய வார்த்தைகள், "இன்னும் எத்தனை நாளைக்குக் கதைக்கப் போறீங்க?"

எனது அம்மா அப்பாவைப் பார்க்க வந்தபோது அப்பா கூறிய வார்த்தைகள். "அம்மா..."

எனது பிள்ளைகள் அப்பாவைப் பார்க்க வந்தபோது, "ஹலோ..." எனக் கூறி புன்முறுவலுடன் அருகே வரும்படி சைகை செய்தார்.

"சின்னக்கா, விஜி... திரையன்..." எனத் தன்னை வீட்டில் கவனித்த அனைவர் பெயர்களையும் அவர் உதடுகள் உச்சரித்தன. இரவில் அண்ணா, சித்ரா ஆகியோர் அன்பாக அப்பாவைக் கவனித்துக்கொண்டனர்.

அப்பாவின் சுகயீனம் கேள்வியுற்றுப் பல உறவுகள் அப்பாவைப் பார்ப்பதற்கு வைத்தியசாலைக்கு வந்தனர். அவர்களில் பலரை அப்பா அடையாளம் கண்டு பெயர்களை உச்சரித்தார். மன்னாரில் இருந்து என் கணவரும் கணவர் தங்கை துஷியும், ஜேர்மனியிலிருந்து எனது தங்கை தீபாவும் மகளும் அப்பாவைப் பார்ப்பதற்கு வந்திருந்தனர். தொடர்ந்து விடு முறையில் இருக்கும் நான் என் வீட்டாருடன் மன்னார் சென்று விடுமுறையை புதுப்பித்துவிட்டு வரும் நோக்கில் மன்னார் திரும்பத் தீர்மானித்தேன். அன்று மதியம் அப்பாவைப் பார்த்துவிட்டு, அப்படியே மன்னார் செல்வதாக இருந்தது.

அன்று வியாழக்கிழமை மதியம் 12.30 மணி வைத்தியசாலையில் அப்பா கண்களை மூடிப் படுத்திருந்தார். எனது தங்கை தீபா, "அப்பா... அப்பா... என அழைத்தார்.

அப்பாவின் உறக்கம் நீடித்தது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"அப்பா... அப்பா... ராதா வந்திருக்கிறன்." - மெதுவாக அழைத்தேன். அப்பா கண்களைத் திறந்தார். என்னைப் பார்த்து நிறைவாக புன்னகை ஒன்றை உதிர்த்தார். நல்ல அழகாகச் சிரித்த அந்தச் சிரிப்புத்தான் நான் காணும் கடைசிச் சிரிப்பு என்பது அப்போது எனக்கு விளங்காமல் போய் விட்டது. நிறைவான அந்தப் புன்னகையில் எனது மனமும் நிறைவாக, தங்கை வந்திருப்பதைக் கூறினேன். தங்கையையும், அவரது சின்னஞ்சிறு மகளையும் திரும்பிப் பார்த்த அப்பா, கண்கள் கலங்க, ஏதோ கூற முற்பட்டவராய் இருமலால் அவதிப்பட்டார்.

அப்பாவின் தலையைத் தடவி, "உறங்குங்கள் அப்பா... ஒன்றுமில்லை... கண்களை மூடி நித்திரை கொள்ளுங்கள்..." - நெஞ்சைத் தடவி விட்டேன். அவர் உறக்கத்தில் ஆழ்ந்தார். எனது பயணம் மன்னார் நோக்கி ஆரம்பமானது. முருங்கனை இரவு வந்தடைந்த நான் களைப்பால் நித்திரையானேன்.

மறுநாள் பொழுது புலர்ந்தது. தூரத்தில் எங்கே ஒரு சேவலின் "கொக்கரக்கோ" கூவல் அதிகாலை உறக்கத்தைக் கலைத்தது. எழுந்து வந்து பார்த்தேன். இலேசான மழைத்தூறலுடன் இருள் முழுவதும் பிரியாமல் ஊரே உறங்கிக் கொண்டிருந்தது. குளிரும் அதிகமாக இருந்தது. ஒரு நிமிடம் சுதாகரித்து எனது கரங்கள் கையடக்கத் தொலைபேசியில் நேரத்தை அவதானிப்பதற்காக நாடின. தொலைபேசியில் பதில் கிடைக்காத அழைப்புக்கள் இரவு 10.30 இலிருந்து மூன்று வந்திருந்தன. பதற்றத்துடன் தொலைபேசியில் தங்கைக்கு அழைப்பினை மேற்கொண்டேன்.

"ராதாக்கா... அப்பா நித்திரை கொள்கிறார். இரவு அப்பா ஒரே கதைத்துக்கொண்டிருந்தார். என்ன வேண்டுமென்று கேட்டால், தான் தேர்தலில் "வோட்" பண்ணவேண்டும் எனச் சொல்கிறார். உங்களுடன் போனில் கதைப்பதற்காகத்தான் இரவு கோல் எடுத்தேன்." என்றாள்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சித்ராவின் பதில் எனக்கு பெரும் நிம்மதியைத் தந்தது. ஆறுதலடைந்தவளாக அன்று அலுவலகத்திற்குக் கிளம்பினேன். அலுவலகம் சென்ற பின்புதான் எனது கையடக்கத் தொலைபேசியை சார்ஜரில் பொருத்திவிட்டு வந்தது ஞாபகத்திற்கு வந்தது. ஏனோ தெரியவில்லை அன்றைய நாள் முழுவதும் எனது மனம் பட பட வென அடித்துக்கொண்டேயிருந்தது. மதியம் கொண்டுசென்ற உணவை சாப்பிட மனமில்லாமல் கொட்டிவிட்டேன். நேரம் பிற்பகல் 2.30 ஐக் காட்டியது. எனது பொறுப்பதிகாரியான பிரதேச செயலாளர் அவர்களிடம் சென்று எனது தந்தையின் சுகயீனம் பற்றிக் கூறினேன். உடனே அவர் வீட்டிற்குச் செல்லும்படி அனுமதி தந்தார்.

மறுநாள் காலை பஸ்ஸில் மட்டக்களப்பு செல்லும் எண்ணத்துடன் அன்றைய தினம் அலுவலகத்தில் தரித்திருந்தேன். ஒருவாறு நேரம் பி.ப. 4.30 ஆகியவுடன் அலுவலகத்தில் இருந்து வீட்டிற்கு வந்த எனக்கு, வீதியில் வைத்தே அப்பேரிடி காத்திருந்தது. என்னைக் கண்டவுடன் எனது இளைய மகள் ஓடிவந்து "அம்மா... அம்மா... அம்மப்பா இறந்துவிட்டாராம்" என்னும் செய்தியை பேரதிர்ச்சியாய்த் தந்தாள்.

"நீங்கள் கோல் எடுத்தால் எடுக்கிறீங்கள் இல்லை..." எனது கணவரின் மச்சான் மோகன் கூறியது எதுவும் மேற்கொண்டு எனது காதுகளில் விழவில்லை. முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டு வீட்டிற்குள் ஓடினேன். ஒரு நிமிடம் எல்லாம் செயலற்று ஸ்தம்பிதம் அடைந்தது போல் இருந்தது.

எனது அன்புத் தீபம் அணைந்து விட்டது. எனது அப்பா இறந்து விட்டார். என்னால் இதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

"ராதா... மகள்..." - இதைத் தவிர ஒரு சுடுசொல் என் தெய்வம் எனக்குக் கூறியதில்லை. மனம் கலங்கும்படி ஒரு கதை கதைத்ததில்லை. என்னால் என் அப்பாவின் இழப்பை நினைத்துப் பார்க்கக் கூட முடியாமலுள்ளது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மகளின் திருமணத்தின் போது சம்பந்தியுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் நடைபெற்ற தேர்தல் கடமையில் நான் ஈடுபட்டிருந்தபோது, எனது அப்பா, "வோட் பண்ணவேண்டும்" எனக் கூறியது நினைவிற்கு வந்து என் கண்களை கண்ணீரால் மறைக்கச் செய்தது.

இனி வாழ்நாள் முழுவதும், நான் உயிருடன் இல்லாமல் போகும்வரை எனது தெய்வத்தின் நினைவுகள், அன்பு முகம், பேசிய வார்த்தைகள், காட்டிய பாசங்கள் என ஒவ்வொன்றாக எனது வாழ்வோடு ஒட்டி வரும். அப்பா என்னை விட்டுப் போகவில்லை. "அழியாத் தெய்வமாக" என்றும் என்னுடன் இருந்து எனக்கு வழிகாட்டுவார். இந்த நம்பிக்கையுடனேயே என் எஞ்சிய காலங்கள் கரையும்.

அப்பா நினைவோடு மகள்

**ராதா**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா எனும் தெய்வம்...

அப்பா...!
எனும் தெய்வம்
ஆண்டவன் எமக்களித்த வரம்
இந்த வரம்தான்
உலகமென்று நம்பிவாழ்ந்த
கிணற்றுத் தவளைகள் நாங்கள்
இவ்வளவு சீக்கிரம் - அப்பா
இல்லாக்காலம் ஆக்கிரமிக்கும் எங்களை
என்பதை இன்னும் கூட
ஏற்றுக்கொள்ள முடியவில்லை
அப்பாவின்
கடைசிப்புன்னகை
கடைசி அழுகை
கடைசிக் காலம்
கடைசிப் பயணம்
ஆம் எல்லாம் முடிந்துவிட்டது
வீட்டுக்கு வரும் போது
வாசற்கதவை திறந்து வைத்துக்கொண்டு
சிரித்த முகத்துடன் வரவேற்கும் அப்பா!
வாழ்க்கையில் கஷ்டம் வரும்போது
இதுவும் கடந்து போகும்...
என எண்ண வேண்டும்"
என்று சொல்லித்தந்த அப்பா!
இனி எங்கு
தேடியும் எமக்கில்லை - அவரும்
எம்மை விட்டு
கடந்து விட்டார்

மகள் **தீபா**
(ஜேர்மனி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையில் கலைந்த கலை...

என் அன்பான, அழகான, பண்பான, பணிவான, அப்பாவுக்கு,

நீங்கள் படிக்கா மடலை எழுதும் அபாக்கியசாலி நான். என்னை 'படி, படி' என ஒருநாளும் வற்புறுத்தியதில்லை நீங்கள். எனினும் படிப்பின் மகிமையையும் பாடப்புத்தகங்களுக்கும் படித்தவர்களுக்கும் எவ்வாறு மரியாதை செய்யவேண்டும் என்பதையும் கற்றுத்தந்தீர்கள்.

நான் எப்போது படிக்கும் போதும் இரவிரவாக கிரிக்கெட் பார்க்கும்போதும் கூடவே கண் விழித்துக் காவல் காப்பீர்கள். பள்ளி செல்லும் காலத்தில் ஒவ்வொரு நாளும் விதவிதமான தின்பண்டங்களைத் தருவீர்கள். விடுமுறை நாட்களிலும், நான் வீட்டிலிருக்கும் சந்தர்ப்பங்களிலும், அம்மா என்ன வாங்கிவரச் சொன்னாலும் எனக்கு என்ன வேண்டும் என்று என்னிடமும் கேட்டுவிட்டே சந்தை செல்வீர்கள்.

நான் **A/L** முடித்த பிறகும், ஏன் நான் மருத்துவராகி இன்று வரையிலும் கூட, பல வண்ண மிட்டாய்களையும் பிளாஸ்டிக் விளையாட்டுப் பொருட்களையும் வாங்கித் தந்தீர்கள் (உங்கள் பார்வையில் நான் இன்னும் குழந்தைதான் போலும்) நான் எவ்வளவு பெரிய பிழைகள் செய்திருப்பினும் கடிந்து ஒரு வார்த்தை கூடக் கேட்டிருக்கமாட்டீர்கள். நான் கேட்ட எல்லாவற்றையும் மறுபேச்சின்றி நிறைவேற்றித் தந்தீர்களே..., ஆனால் நீங்கள் கடைசியாய் கேட்டதைக் கூட என்னால் நிறைவேற்ற முடியாமல் போனதே! கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என வாழ்ந்த நீங்கள் நோயுற்றுப் படுக்கையிலிருந்த போதும் 'தேர்தலில் வாக்களிக்க வேண்டும்" எனவே என்னைக் கேட்டீர்கள்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நிமிர்ந்த நடையும் நேர் கொண்ட பார்வையுமாய் நேர்த்தியாகவும் சுறுசுறுப்பாகவும் நடந்து கொள்ளும் உங்களுக்கு, எந்த கெட்டபழக்கமும் இல்லாதிருக்க, எங்கிருந்து வந்ததப்பா ஈரல் புற்றுநோய்?

ஒழுங்காக கிளினிக் சென்று, நேரந்தவறாது மாத்திரைகளை விழுங்கி, எந்தவொரு சிறு உடல் உபாதை ஆயினும் என்னிடம் கூறி மருந்துகள் பெற்றுக் கொள்வதுடன் நான் வீட்டிற்கு வரும்போதில் 'பிரஷ்ஷரை பாருங்க" எனக் கேட்கும் நீங்கள், எத்தனை ஆண்டு காலமாகப் பெரிய பெரிய புற்றுநோய்க் கட்டிகளைக் காவி வந்தீர்களோ! நீங்கள் வணங்கிய தெய்வ அருளோ, இல்லை செய்த புண்ணியமோ - இரு வாரங்களுக்கு மேல் அவை எந்தவித அறிகுறிகளையோ, துன்பத்தையோ உங்களுக்குத் தரவில்லை.

என்னிலே முழுநம்பிக்கையையும் வைத்து வந்த உங்களின் முதலும் கடைசியுமான ஒரு வார வார்ட்டு அனுமதியில் என்னாலும் எவராலும் குணமாகாத வருத்தம் உங்களுக்கென எப்படியப்பா கூறுவது? எப்படி அறிந்தீர்களோ, வார்ட்டுக்கு வந்த பின்பு, "இன்னும் எத்தனை நாளைக்கு?" என்றும் "கெதியா போகணும்." என்றும் கூறினீர்கள்.

கடைசியாக நான் உங்களிடம் அதைக் கூறியபோது, அதுவே உங்களின் கடைசி இரவென நான் அறிந்திருக்கவில்லை. அதை எவ்வாறு நீங்கள் சகித்திருப்பீர்கள்... நான் கைவிட்டுவிட்டேன் எனக் கடிந்திருப்பீர்களோ என எண்ணித் தவித்தபோதும் நான் வரும் வரை காத்திருந்து கடைசி மூச்சை உங்கள் கடைக்குட்டியின் கைகளிலே கரைத்தீர்களே, அதை என் கடைசி வரை எவ்வாறு நான் மறப்பேன் அப்பா?

உங்கள்

**சித்ரா**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எங்கள் அம்மப்பா...

'பூமிக்கு வரவே இறைவன் நினைத்தான்
அம்மப்பா வடிவை அவன் எடுத்தான்."

அம்மப்பா எனக்கு மட்டுமல்லாமல் என் அம்மா, அப்பாவிற்கும் இறைவனால் அருளப்பட்ட வரம். அவரைப் பற்றி எழுதுவதில் நான் பெருமையடைகின்றேன். நான் பிறந்தது முதல் இன்று வரை என் அம்மப்பாவை பார்த்துக் கொண்டே இருந்தேன். அவர் எப்போதும் எங்களை கூப்பிட்டுத் தின்பண்டங்களை தருவார். உணவில் மட்டுமல்லாமல் படிப்பிலும் அவர் எங்களை ஊக்கப்படுத்துவார். நாங்கள் பொதுநூலகத்தில் படித்ததை விட அம்மப்பாவின் நூலகத்தில் படித்ததுதான் அதிகம்.

கட்டுரை எப்படி எழுத வேண்டும் என்று அவர் எனக்கு சொல்லித்தந்தார். அவர் சொல்லித்தந்த கட்டுரையை எழுதிக்கொடுத்து நான் 3வது இடத்தை வாங்கியிருக்கின்றேன். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அவர் "யிநச எடுப்பார். நான் அதைப் பார்த்து எல்லோரிடமும் விடுகதைகள் கேட்பேன். அப்போது அவரும் வந்து எல்லோருடனும் வந்து அமர்ந்து விடை சொல்வார். பின் 6 மணி ஆனதும் "சஹானா இங்கே வா" என்று என்னை அழைப்பார். நானும் சென்று "என்ன அம்மப்பா" என்று கேட்பேன். அவர் என்னிடம் சொல்வார்:

"6 மணி ஆகிவிட்டது. சுவாமி அறையை கூட்டி விளக்கேற்றிவிட்டு துளசி அம்மாளுக்கு விளக்கு வையுங்கள்" என்று கூறுவார். பின் 7 மணியளவில் சாமி கும்பிட்டு விட்டு வந்து அனைவருக்கும் **Biscuit** தருவார். நாங்களும் உண்போம். வியாழக்கிழமையில் அவர் என்னை அழைத்து கடலை மாலை கட்டுவதற்கு ஊசிக்கு நூல் போடும்படி சொல்வார் நானும் போட்டுக்கொடுப்பேன். நவராத்திரியில் வரும் சரஸ்வதியின் மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களிலும் சரஸ்வதிக்கு விளக்கு ஏற்றி வழிபடுமாறு எங்களிடம் கூறுவார். பரீட்சை முடிந்ததும் என் பெறுபேற்று அட்டையை காட்டுவேன். அவர் அதை பார்த்து விட்டு புள்ளி எல்லாம் நன்றாக உள்ளது. ஆனால் முதலாம் பிள்ளையாக வரவேண்டும் என்பார்.

என் பிறந்த நாள் மட்டுமல்லாமல் ஏனையோரின் பிறந்தநாளுக்கும் மெழுகுதிரி ஏற்றுவதற்கு முன் நிற்பார். சித்திரை வருடம் எனக்கு வரும் முதல் கைவிசேடம் அம்மப்பாவின் கைவிசேடம்தான். என் பிறந்த நாளுக்கு வரும் முதல் ஆசீர்வாதம் அம்மப்பாவின் ஆசீர்வாதம்தான்.

அவரால் நடக்கமுடியாமல் படுத்தபடுக்கையாய் இருந்த போதும் என்னை அழைத்து "விளக்கேற்றியதா?" என்று கேட்டார். 8 மணி ஆனதும் எங்கிருந்தாலும் வந்து விடுவார். காரணம் **TV**யில் செய்திபோகும். நாங்கள் அதை பார்க்கவிரும்பாததால் வேறு அலைவரிசையில் மாற்றிவிடுவோம். "என்னடா இது, செய்தியைப் போடுங்கள்" என்பார். இனி அந்த ஏச்சை எல்லாம் எங்கு கேட்போம்! 8 மணியானால் செய்திபோகும். பார்ப்பதற்கு அம்மப்பா இல்லை என்பதை நினைத்தால் கண்ணீர் கொட்டுகிறது. அவர் மீண்டும் தவபதியில் பிறப்பார் என்று நினைக்கின்றேன். அவர் உடல் இல்லாவிட்டாலும் அம்மப்பா எங்களோடு இருப்பதாக நான் நினைக்கின்றேன்.

அன்புள்ள பேத்தி

**பொன்னம்பலம் சாயிசஹானா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகள், பேரப்பிள்ளைகளுடன்



84வது பிறந்தநாளில் பேரன் பேத்தி குதூகலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் அம்மப்பா...

இப்படி ஒரு அம்மப்பா கிடைத்தது எனது அதிர்ஷ்டம். நான் குழந்தையாக இருந்ததில் இருந்து இன்றுவரை என்னை அன்புடன் அரவணைத்தவர் என் அம்மப்பா.

நான் பாடசாலை விட்டு வாசலில் வரும் போதே அம்மப்பா "ஆ வாங்க வாங்க" என்று என்னை வரவேற்பார். நான் **Class** இற்கு போகும் போது யார் **Bye** சொல்லா விட்டாலும் அம்மப்பா எனக்கு ஒவ்வொரு நாளும் **Bye** சொல்வார். இப்போது **Bye** சொல்வதற்கு அம்மப்பா இல்லை. நான் **Class** விட்டு வரப் பிந்தினாலும் "துவிஷா எங்க...?" என்று கேட்பாராம்.

நான் பாடசாலைக்கு தேவையான எந்தப்பொருளைக் கேட்டாலும் இல்லை என்று சொல்லாமல் வாங்கித்தருவார். மாலையானதும் **Tea** குடிப்பதற்கு பிஸ்கட் கேட்டால் எந்த வேலை இருந்தாலும் உடனே சென்று எடுத்து தருவார்.

நான் ஒரு தடவை **Colour chalk** கேட்டதற்கு றூவைந உயடம வாங்கி வந்திருந்தார். அதனை மறக்காமல் என்னை கூப்பிட்டு தரும் போது நான் "இது இல்லை அம்மப்பா. நான் கேட்டது **Colour Chalk**. நான் **Colour chalk** எடுத்து விட்டேன்" என்று கூறினேன். அம்மப்பா இறந்ததன் பின் அவரின் அறையை சுத்தம் செய்யும் போது அந்த **White chalk** எடுத்து தந்தனர். அதனை பார்க்கும் போதெல்லாம் அம்மப்பாவின் நினைவு என்னை தூண்டும்.

சரஸ்வதி பூசையில் இறுதி 3 நாட்களும் சரஸ்வதிக்கு பூசை செய்யுமாறு கூறுவார்.

அவர் 8 மணி ஆனதும் **TV**யில் செய்தி பார்ப்பார். பிள்ளைகளின் படிப்பிற்கு நல்லம் என்று வியாழக்கிழமையில் கடலை மாலை சரஸ்வதிக்கு போடுவார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எனது அம்மப்பா ஞாயிற்றுக்கிழமையில் பேப்பர் எடுப்பார். தினமும் மாலையில் சுவாமிக்கு வைப்பதற்கு மல்லிகைப்பூ பறிப்பார். அவர் மெது மெதுவாக பல தடவைகள் நடந்து சென்று சுவாமிக்கு பூப் பறிப்பார். அம்மம்மா "ஏன் நடக்கிறீங்க? இவ்வளவு பிள்ளைகள் இருக்குதுகள் இதுகள்ட சொல்லி பூ ஆயலாம் தானே" என்று சொன்னால் அதற்கு "இல்லை நான் வைப்பேன்" என்பார், அம்மப்பா. இப்போது மெல்ல மெல்ல நடந்து சுவாமிக்கு பூ வைப்பதற்கு அம்மப்பா இல்லை.

அவர் சிறிது காலமாக ஒழுங்காக சாப்பிடவில்லை. நாங்களும் அதனை பெரிதாக கவனிக்கவில்லை. பின் படுத்த படுக்கையாகி விட்டார். இறுதியில் இவ்வாறு எங்களை விட்டு விட்டு இறைவனிடம் செல்வார் என்று நினைக்கவே இல்லை.

அம்மப்பாவின் உடல் எம்மோடு இல்லாவிட்டாலும் அவரின் ஆன்மா எங்களோடு இருக்கும். என் அம்மப்பா வானத்தில் ஒளி வீசும் ஒரு நட்சத்திரமாக ஜொலிப்பார்.

அன்புப் பேத்தி

**துஷன் துவிஷதா**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மப்பா... அப்பப்பா...

எங்களது அம்மப்பா, அப்பப்பா மிகவும் அழகானவர், அன்பானவர். எங்களைப் பார்த்து எப்போதும் ஆசையாகத் தலையைத் தடவுவார். இனிப்புக்கள் கொடுப்பார். அழகாகச் சிரிப்பார். நாம் குழப்படிகள் செய்தால் ஏசமாட்டார். எமக்குப் பிறந்தநாள், பொங்கல், சித்திரை வருடப் பிறப்பு, தீபாவளி என்றால் புது உடுப்புக்கள் வாங்கித் தருவார்.

கொப்பிகள், பென்சில்கள், புத்தகப்பை மற்றும் கற்றல் உபகரணங்கள் எல்லாம் வாங்கித் தருவார். பண்டிகைக் காலங்களில் கைவிசேடம் தருவார்.

எமது அம்மப்பாவை, அப்பப்பாவை எங்களுக்கு மிகவும் பிடிக்கும். அவரைப் பார்க்க வேண்டும் போல ஆசையாக இருக்கிறது. அவர் எங்களை அன்பாக அழைப்பது இன்னும் எம் காதுகளில் ஒலிக்கிறது. கடவுளைப் பார்த்து என்ன வேண்டும் எனக் கேட்பதென்றால் இந்த அம்மப்பா தான் எங்களுக்கு எப்போதும் அம்மப்பாவாக, அப்பப்பாவாக வரவேண்டும் எனப் பிரார்த்திப்போம்.

பாசத்துடன்

**பேரப்பிள்ளைகள்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| இவ்வுலகில் | | இறையுலகில் |
|---|---|---|
| 27 | | 01 |
| 03 | | 11 |
| 1935 | | 2019 |



ஆரையம்பதி 1ம் குறிச்சியை சேர்ந்த

## திரு. கந்தப்பன் செல்லத்தம்பி

(ஓய்வுபெற்ற கிராமசேவை உத்தியோகத்தர்)

அவர்கள் 01.11.2019 வெள்ளிக்கிழமையன்று இறைபதமடைந்தார்.

அன்னார்


காலஞ்சென்றவர்களான **கந்தப்பன், குஞ்சுப்பிள்ளை** ஆகியோரின் பாசமிகு மகனும்,
காலஞ்சென்றவர்களான **இராசையா, தங்கப்பிள்ளை** ஆகியோரின் அன்பு மருமகனும்,
**தவமணிதேவியின்** பாசமிகு கணவரும்,
**இளந்திருமாறன்** (லண்டன்), **தவச்செல்வி, இளஞ்செழியன்** (ஜேர்மனி),
**தமிழ்ச்செல்வி** (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம். நாவற்பான்),
**இளந்திரையன், தாமரைச்செல்வி** (ஜேர்மனி), **இளங்குமரன், தாரகைச்செல்வி,**
Dr. **பங்கயச்செல்வி** (மட்/போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,
காலஞ்சென்ற **இராசம்மா,** காலஞ்சென்ற **ஐயம்பிள்ளை,** காலஞ்சென்ற **பார்பதி** (ஓய்வு பெற்ற ஆசிரியை),
**ஆறுமுகம்** (வலயக்கல்விப் பணிப்பாளர், வட-கிழக்கு மாகாண தொழிநுட்ப கல்லூரிகள்)
ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற **அழகையா,** காலஞ்சென்ற **அன்புமணி நாகலிங்கம்,**
**சந்திரானந்தம்,** காலஞ்சென்ற **நல்லரெத்தினம்** (சாரதி), காலஞ்சென்ற **பூபாலரெத்தினம்** (முன்னாள் விலை மதிப்பீட்டுப் பரிசோதகர்), காலஞ்சென்ற **சுந்தரலெட்சுமி, மோகனச்சந்திரன்** (அவுஸ்திரேலியா),
காலஞ்சென்ற **மனோகரன், ரவிஆனந்தன்,** (ஓய்வு நிலை ஆசிரியர்), **ரஞ்சிதமலர், விஜயராணி**
ஆகியோரின் அன்பு மைத்துனரும்,**அனுலாதேவி** (லண்டன்), **ஜெயகுமாரி** (ஜேர்மனி), **துஷன்,**
**ஞானகுமார்** (ஜேர்மனி), **சாயிகரன்,** Dr. **கிஷோக்குமார்** (மட்/போதனா வைத்தியசாலை)
ஆகியோரின் அன்பு மாமனாரும், **சுந்தரலெட்சுமி,** காலஞ்சென்ற **கிருபைரெத்தினம், வடிவேல்** (முன்னாள் நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச செயலகம், மண்முனைப் பற்று), **கமலாதேவி** (அவுஸ்திரேலியா), **இராஜேஸ்வரி, புஸ்பராணி**
(ஓய்வுநிலை ஆசிரியை) ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும்,
**சாயிஸஹானா, செல்வகன், லக்ஷண்யா, துவிஷதா, துவாரகேஷ், துவர்ஷிதா, அக்ஷரா,**
**சாருகேஷ், ஹரிஷ்மிதா, ஹர்ஷதன்** ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் ஆவார்.

**அன்னாரின் ஈமக்கிரியைகள் 03.11.2019 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக ஆரையம்பதி பொதுமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

| 'தவபதி' | தகவல் |
|---|---|
| ஆரையம்பதி. | குடும்பத்தினர் |

துர்க்கா அச்சகம் - கொக்குவில் 065 2053060 கிளை - அரசடி. மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எங்கள் குடும்பத் தலைவர் இறையடி சேர்ந்த செய்திகேட்டு ஓடோடி வந்து உதவிக்கரம் நீட்டியவர்களுக்கும் ஆறுதல் மொழி கூறி அரவணைத்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், பதாதைகள் வெளியிட்டு அஞ்சலித் தவர்களுக்கும், தொலைபேசி, சமூக ஊடகங்கள் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும், இரங்கலுரைகள் நிகழ்த்தியோருக்கும், காடாற்றும் நிகழ்வில் கலந்து கொண்டோருக்கும், இந்நினைவு மலருக்குப் பங்களிப்புச் செய்தோருக்கும், அந்தியேட்டி நிகழ்வில் கலந்துகொண்டோருக்கும், எமக்கு பெரிதும் உதவிய மட்/ போதனா வைத்தியசாலை (குறிப்பாக 16ம் வார்ட்) மருத்துவ உத்தியோகத்தர்கள், தாதியர், ஊழியர்களுக்கும் பற்பல வழிகளிலும் எமக்கு உதவி, ஒத்தாசைகள் புரிந்த உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் இந்நினைவு மலரை அழகுற அச்சிட்டுத் தந்த துர்க்கா அச்சகத்தினருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"தவபதி"
ஆரையம்பதி - 01

இவ்வண்ணம்
**குடும்பத்தினர்**

துர்க்கா அச்சகம், கொக்குவில், மட்டக்களப்பு. 065 205 3060

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதாஞ்சலி .......

ஆரையூர்த் திருப்பதியாம் அருங்கலைப் பூங்காவுக்கு
ஆரையூர் இளவலென்றும் அருள்மேகம் பொழிந்த தமிழ்
நனைந்திருந்தோம் கலை மேகம் கலைந்த செய்தி
அறிந்து மனம் கலங்கையில் அரிய உந்தன் பணி சொல்ல
உள்ளத்தில் வார்த்தையில்லை உரைப்பதற்கும் தகுதியில்லை
அன்பான உன் வார்த்தை அரவணைக்கும் உன் பண்பு
உனைக்காண நாம் வந்தால் உபசரிக்கும் உன் முகத்தை
இனிக்காண முடியாமல் இருவிழியும் கலங்குதே!
இல்லறத்தை நல்லறமாய் இனிமையுடன் வாழ்ந்து பெற்ற
பிள்ளைகளை பண்போடு பிறர் போற்ற வளர்த்தவன் நீ
உன் பிரிவைத் தாங்காமல் உன் குடும்பம் தவிப்பதையும்
அம்மப்பா என்று சொல்லி அன்பான உன் பேரர்
கதறுவதைக் காணாமல் கண்ணிரண்டும் மூடிவிட்டாய்
நாடகங்கள் பல எழுதி நடிப்பித்த உன் கரங்கள்
வாடிக்கிடக்கிறதே; மன்றத்து மேடைகளில்
ஏறித்தமிழ் மொழிந்த ஈரிதழும் மூடியதே!
மண்சுமந்த மகேசனாம் வரலாற்று நாடகத்தை
குறும்படமாய் வெளியிட்டு பெரும் புகழைப் பெற்றவன் நீ
மண்வாழ்வு போதுமென்று மனைவிமக்கள் தமைப் பிரிந்து
விண்வாழ்வு பெற்றுவிட்டாய் வேதனையை தந்துவிட்டாய்
பூத உடம்பு விட்டு புகழுடம்பு பெற்றுவிட்டாய்
மாண்டார் வருவதில்லை மறைசொல்லும் விதியாலே
இன்று நாம் சாந்தி கொள்வோம்; மைத்துனராம் அன்புமணி
தன்னோடு விண்ணுலகில் சிவனார் திருப்பாத
நிழலிலே வாழ்ந்திடுக! உம் நினைவில் நாமிருப்போம்

ஆரையூர் கலாமன்றம்
ஆரையம்பதி

துர்க்கா அச்சகம்
கொக்குவில்,மட்டக்களப்பு 065 205 3060

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org